பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 மாசி 16 வெள்ளிக்கிழமை 28.02.2020 கதிர் 114

**இனி இது ரகசியம் அல்ல!**

ஜவ்வுமிட்டாய் போல இழுபடும் ஐக்கிய தேசியக் கட்சியின் உட்கட்சிப் பூசல் இன்று மீண்டும் சூடு பிடிக்க விருக்கின்றது.

கட்சியின் செயற்குழு இன்று மீண்டும் கூடுகின்றது.

ஐ.தே.கட்சித் தலைமையின் அனுமதியின்றியே பக்கம் 02



## பாரதூரமான விளைவுகளை இலங்கை சந்திக்க நேரிடும்!

### எச்சரிக்கின்றார் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, பெப்.28

வரிந்து கட்டிக்கொண்டு சண்டியனைப் போன்று நாம் எவருக்கும் பயப்படவில்லை என்று சொல்லி சிங்கள மக்கள் மத்தியிலே உடனடியாக ஒரு பிரபல்யத்தைப் பெற அவர்கள் செய்வது அவர்களுக்கும் கேடானது, நாட்டுக்கும் கேடானது. ஐ.நா. தீர்மானத்தில் இருந்து விலகியமைக்காக இலங்கை பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்க நேரிடும். பக்கம் 03

## லீசிங் பணியாளர்கள் பேச்சினால் மனமுடைந்த தாய் உயிர்மாய்ப்பு!

### தாவடியில் புதனன்று சம்பவம்

யாழ்ப்பாணம்,பெப்.28

லீசிங் நிறுவனத்தின் பணியாளர்கள் இருவர் தரக்குறைவாகப் பக்கம் 03

# இலங்கையின் மாற்றுப் பொறிமுறையை ஐ.நா.ஆணையர் அடியோடு நிராகரிப்பு!




## இராணுவ அதிகாரிகளின் கைகளுக்கு நிர்வாகம் மாறுவது குறித்தும் அதிருப்தி

ஜெனீவா,பெப்ரவரி 28

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைக்கான பிறிதொரு பொறிமுறையாக மற்றொரு ஆணைக்குழு நியமிக்கப்படும் என இலங்கை அரசாங்கம் அளித்துள்ள வாக்குறுதியை ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையார் நேற்று நிராகரித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் அல்லது ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளின் கீழ் மக்களின் செயற்பாடுகளை நகர்த்துவதற்கான சமீபத்திய போக்குக் குறித்துத் தாம் கவலையடைகின்றார் எனவும் அவர் தெரிவிதுள்ளார். பக்கம் 03

## யாழ். - சென்னை விமானம் நேற்றுத் தொடக்கம் தினசரி



யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து சென்னைக்கு நேற்று முதல் நாளாந்த விமான சேவைகள் ஆரம்பமாகியுள்ளன. பக்கம் 03

## ஐ.நா. சபையில் இலங்கையை தொடர்ந்தும் விட்டுவைப்பதா?

### மீள்பரிசீலனை செய்யுமாறு பொதுச்சபையை பகிரங்கமாகக் கோருகிறார் நீதியரசர் விக்கி



யாழ்ப்பாணம், பெப்ரவரி28

சர்வதேச சமூகத்தில் தனது கூட்டுப்பொறுப்பை நிறைவேற்றாமல் நிராகரித்து நிற்கும் இலங்கையின் செயற்பாடு தொடர்பில் உரிய முறையில் பிரதிபலிப்பைக் காட்டும்படி சர்வதேச சமூகத்தை நாம் வேண்டுகின்றோம். ஐ.நா. சபையில் இலங்கையின் அங்கத்துவம் குறித்து - பாதுகாப்புச் சபையின் பரிந்துரையைப் பெற்று - மீள்பரிசீலனை செய்யுமாறு ஐ.நா. பொதுச்சபையைக் கோருகின்றோம்.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன். பக்கம் 02

## சனல் 4 ஊடகவியலாளர் ஜோனுக்கும் கொரோனா!



லண்டன், பெப். 28

போரின் இறுதிக் கட்டங்களில் இலங்கை இராணுவம் புரிந்த போர்க்குற்றங்களை அம்பலப்படுத்திய பிரிட்டன் பக்கம் 03

## காரைக்கால் - காங்கேசன் கப்பல் சேவை மூன்று வாரத்தில் ஆரம்பிக்க நேற்று முடிவு

### இரு வழிக் கட்டணம் நூறு டொலரும் வரிகளும்

புதுச்சேரி,பெப்.28

புதுச்சேரியின் (பாண்டிச்சேரியின்) காரைக்கால் இருந்து இலங்கையின் யாழ்ப்பாணம் காங்கேசன்துறைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து விரைவில் தொடங்கப்பட உள்ளதாகவும், இதற்கான கட்டணம் (இந்தியப் பணத்தில்) ரூபாய் 7 ஆயிரம் வரை இருக்கு பக்கம் 03

## காரைநகர் பிரதேச செயலராக மரியதாஸன் ஜேகூ பதவியேற்பு

யாழ்ப்பாணம், பெப். 28

காரைநகர் பிரதேச செயலராக மரியதாசன் ஜேகூ நியமிக்கப்பட்டுள்ளார். பக்கம் 03

## சஜினுக்கு விளக்கமறியல்!

கொழும்பு, பெப். 28

நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்ட காலப்பகுதியில் சட்டவிரோதமாக 30 கோடி ரூபாவுக்கும் அதிகமான பக்கம் 03

## ஐ.நாவின் வலுவான பதிலடியை கோருகின்றது மன்னிப்புச் சபை

கொழும்பு,பெப்.28

ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலின் பொறுப்புக்கூறும் தீர்மானத் பக்கம் 03

# சிறுப்பிட்டி மயானத்தில் சடலத்தை எரியூட்டுவதற்கு மீண்டும் எதிர்ப்பு!

## பொலிஸார், இராணுவம் குவிப்பு வேறு மயானத்தில் இறுதிக் கிரியை

யாழ்ப்பாணம், பெப். 28

புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டி கலைமதி கிந்துப்பிட்டி மயானத்தில் சடலம் எரியூட்டுவதற்குத் தயாரானபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப் பகுதியிலுள்ள மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பொலிஸார், சிறப்பு அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டதால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

அந்த மாயானத்தில் சடலம் எரியூட்டுவதற்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த பல நூற்றுக் கணக்கான மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் அங்கு தகனம் செய்வதற்கு எடுத்துவரப்பட்ட பூதவுடலை வேறு மயானத்தில் தகனம் செய்யுமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் கட்டளை வழங்கியது.

அத்துடன், கிந்துப்பிட்டி மயானத்துக்கு விறகு ஏற்றிச் சென்ற லாண்ட்மாஸ்ரரை சேதப்படுத்தியமை, அதன் சாரதியைத் தாக்கியமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் எதிர்ப்பாளர் நால்வர் அச்சுவேலிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எதிர்ப்பாளர்களின் தாக்குதலில் காயமடைந்த லாண்ட்மாஸ்டர் சாரதி வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தூர் கலைமதி கிராமத்தில் உள்ள மயானத்தை அகற்றுமாறு மயானத்தைச் சூழவசிக்கும் மக்களில் ஒரு பகுதியினர் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். எனினும், இன்னொரு பகுதி மக்கள் அங்கு சடலங்களை எரியூட்ட விரும்புகின்றனர்.

ஒரு குடும்பத் தகராறையடுத்தே எரியூட்டுவதில் சர்ச்சையேற்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

அந்த மயானத்தில் சடலங்களை எரியூட்டுவதற்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

இதேவேளை, 2017ஆம் ஆண்டு மல்லாகம் நீதிவான் நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைக்கு ஆட்சேபனை தெரிவித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் மயானத்தை சூழவுள்ள மக்கள் சார்பில் சீராய்வு மனுத் தாக்கல் செய்தனர்.

வழக்கின் எதிர்மனுதாரர்களாக கிந்துப்பிட்டி மயான நிர்வாகம், அச்சுவேலிப் பொலிஸார் மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டனர்.

அந்த மனு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் 2017ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது இந்து மயானத்தில் சடலங்களை எரியூட்டுவதற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது.

இந்த சீராய்வு மனு மீதான விசாரணை சுமார் இரண்டு வருடங்களாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் இடம்பெற்று வந்தது. மனு மீதான இறுதிக் கட்டளை கடந்த நவம்பர் 8ஆம் திகதி வழங்கப்பட்டது.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றால் 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி வழங்கிய கட்டளையை ரத்துச் செய்து கட்டளையிட்ட யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், சீராய்வு மனுவையும் தள்ளுபடி செய்தார்.

இந்த நிலையில் கிந்துப்பிட்டி இந்து மயானத்தில் சடலங்களை எரியூட்டுவதற்கு அனுமதி கோரும் தரப்பு மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் அணைத்து தமது விண்ணப்பத்தை மன்றில் கடந்த நவம்பர் மாதம் முன்வைத்தனர்.

மயானத்தைச் சுற்றி மதில் அமைத்து சடலங்களை அங்கு எரியூட்ட முடியும். அதனை எதிர்த்தரப்புத் தடுக்க முடியாது. அங்கு குழப்பம் விளைவித்தாலோ மதிலை உடைத்து அத்துமீறினாலோ அந்த தரப்புக்கு எதிராக பொலிஸார் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மல்லாகம் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-07)

# நாமல் வெளிநாடு செல்ல இருந்த தடை விலகியது

கொழும்பு, பெப். 28

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட 4 சந்தேகநபர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு பயணத் தடை ஜுலை மாதம் 23 ஆம் திகதி வரை தளர்த்தப்படுவதாகக் கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்ன உத்தரவிட்டுள்ளார்.

சட்டவிரோதமாக உழைக்கப்பட்ட 15 மில்லியன் ரூபா நிதியை என்.ஆர். கொன்சல்டன்ஸி நிறுவனத்தில் முதலீடு செய்தமை தொடர்பில் நிதி மோசடிச் சட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட நான்கு பேருக்கு எதிராகப் பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவினால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது இந்த உத்தரவு விடுக்கப்பட்டது.

சம்பவத்துடன் தொடர்புடைய விசாரணை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு அறிக்கைகள் அனைத்தும் ஆலோசனைக்காகச் சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் நீதிமன்றில் அறிவித்தனர்.

எனினும், இந்த முறைப்பாடு தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை இது வரை கிடைக்கவில்லை எனப் பொலிஸார் மேலும் கூறினர்.

இந்த விடயங்களை ஆராய்ந்த நீதவான் முறைப்பாட்டை மீண்டும் ஜுலை மாதம் 23 ஆம் திகதி அழைக்குமாறும் மற்றும் சட்டமா அதிபர் ஆலோசனை தொடர்பில் நினைவூட்டல் ஒன்றைச் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்குமாறும் உத்தரவிட்டார்.

இதன்போது, பிரதிவாதி நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட பிரதிவாதிகள் நான்கு பேர் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி, தனது கட்சிக்காரர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டுப் பயணத் தடையை எதிர்வரும் வழக்கு தினம் வரை தளர்த்தி உத்தரவு ஒன்றை பெற்றுத் தருமாறு கோரியிருந்தார்.

இந்தக் கோரிக்கையை ஏற்ற நீதவான் வெளிநாட்டு பயணத்தடையை எதிர்வரும் வழக்கு தினம் வரை தளர்த்துமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு உத்தரவிட்டுள்ளார். (ஐ)

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா மனித உரிமைகள் கவுன்சிலில் தானும் சேர்ந்து நிறைவேற்றிய தீர்மானங்களின் இணை அனுசரணைப் பணியிலிருந்து இலங்கை வெளியேறியமையை ஒட்டித் தாம் வெளியிட்ட பகிரங்க அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையின் பிரதான சாரம்சம் வருமாறு:-

இலங்கையின் இந்த முடிவு வடக்கு, கிழக்கிலும் உலகெங்கும் வாழும் தமிழர்களுக்குப் பெரும் அதிருப்தியாகும். ஆனாலும் இந்த முடிவு ஆச்சரியம் தருவதல்ல.

அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் ஜெனீவா அறிவிப்பு ஒரு தசாப்த காலத்தின் முடிவு.

சுமார் பத்தாண்டுகளாக இலங்கை சர்வதேச சமூகத்துக்குத் தவறாமல் தனது கடப்பாடுகளைப் பொறுப்போற்பதாக உறுதிப்பாடுகளை வழங்கியபடி, அதே மாதிரி தவறாமல் அவற்றை நிறைவேற்ற மறுத்தும் வந்துள்ளது.

முதல் தடவை இலங்கைக்கு இரண்டு ஆண்டுகள் காலம் வழங்கப்பட்ட நிலையில் எதுவும் களத்தில் நடக்காத போது, மேலும் இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்பட்ட சமயம், எங்களில் சிலர் எமது எதிர்ப்பை அமெரிக்கப் பிரதிநிதிகளிடம் தெரிவித்திருந்தோம்.

இலங்கை பல கடப்பாடுகளை நிறைவு செய்வதில் தவறிவந்துள்ள போதிலும் –

அவற்றுள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், இனவழிப்புக் குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை நிலைநாட்டுவதற்கான பொறிமுறை ஒன்றை ஸ்தாபிப்பதற்கு மறுத்து வருகின்றமை துலாம்பரமாகத் தோற்றுகின்றது.

*'2009 மேக்குப் பின்னர் பிரிவினைவாதப் பயங்கரவாதத்தின் பெயரால் ஒரு வேட்டுக்கூடத் தீர்க்கப்படவில்லை என்பதை பெருமையுடன் கூறிக்கொள்கிறேன்.'* – என்று அங்கு பீற்றிக் கொண்ட அமைச்சர் குணவர்த்தன, அப்படியாயின், மிகக் கொடூரமான – 1979ஆம் ஆண்டின் – பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஏன் இன்னும் விலக்கிக் கொள்ளப்படவில்லை என்பதற்கான காரணத்தை விளக்க வில்லை.

'உள்நாட்டு விசாரணை ஆணைக்குழு' என்று நேற்று வழங்கப்பட்ட உறுதிமொழி உண்மையில் 2010இன் 'கற்றுக்கொண்ட பாடங்கள் மீள்நல்லிணக்க ஆணைக்குழு'வின் மீள் உருவாக்கம் பற்றிய ஒரு சுருக்கமே.

இலங்கை இந்தப் புதிய உறுதிமொழியை நிறைவேற்றினாலும் கூட, உண்மையைக் கண்டறியும் எத்தனத்தில் நாம் இனி எத்தனை தசாப்தங்களைத் தாண்டினாலும் கூட சிறிதளவேனும் முன்னேற்றம் காணவில்லை என்பதே நிலைமை.

உண்மைகளை வெளிக் கொணர்வதில், தொடர்ந்து அதிகாரத்துக்கு வரும் சிங்களப் பெரும்பான்மை அரசுகளுக்கு பற்றுறுதியோ, திடசங்கற்பமோ இல்லாத காரணத்தினால் இப்படி வழங்கப்படும் உறுதிப்பாடுகளுக்கு மதிப்பு ஏதும் கிடையாது என்பதுதான் நிலைமை.

சர்வதேச சமூகத்தின் கூட்டுப் பொறுப்பை நிராகரித்து நிற்கும் இந்த விடயத்துக்கு, தகுந்த முறையில் பிரதிபலிப்பைக் காட்டுமாறு நாம் சர்வதேச சமூகத்தை வேண்டுகின்றோம்.

இத்தகைய மோசமான குற்றங்களை விசாரிப்பதற்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலோ அல்லது வேறு உரிய களத்திலோ இலங்கை அணியினரை நிறுத்துவதற்கு சர்வதேச சமூகம் தனது உலகளாவிய நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் கடப்பாட்டை – பொறுப்பை – கொண்டுள்ளது.

"ஐ.நா சபையின் தற்போதைய சாசனத்தில் (பட்டயத்தில்) கூறப்பட்டுள்ள கொள்கைக் கோட்பாடுகளைத் தொடர்ச்சியாக மீறி வரும் உறுப்பு நாடு ஒன்றை பாதுகாப்புக் கவுன்சிலின் பரிந்துரையோடு சபையின் அங்கத்துவத்தில் இருந்து வெளியேற்ற முடியும்" – என்று சாசனத்தின் ஆறாவது சரத்து கூறுகின்றது.

ஐ.நா தீர்மானங்களை தொடர்ந்து மீறுவதுடன், தீவின் மக்கள் கூட்டத்தின் பல்வேறு பிரிவுகள் மீது அரச அனுமதியுடனான துஷ்பிரயோகத்துக்கு இடமளிக்கும் நீண்ட வரலாற்றைக் கொண்டிருப்பதால் இந்த விவகாரம் மேற்படி சாசனத்தின் ஆறாவது ஷரத்துக்கு வழிப்படுத்தக் கூடியது.

ஆகையால்–

ஐ.நா சபையில் இலங்கையின் அங்கத்துவம் குறித்து – பாதுகாப்புச் சபையின் தகுந்த பரிந்துரையுடன் – மீற்பரிசீலனை செய்யுமாறு பொதுச்சபையை நாம் கோருகின்றோம்.

இன்று வரை இலங்கை உலகுக்கு தனது கடப்பாட்டை நிறைவு செய்யவில்லை. இது, உலகம் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் தருணம்.

இன்று ஒரு நாட்டினுடைய கடப்பாட்டை தூக்கிக் கடாசுவது, நாளை உலக சபையின் சாவு மணியாகி விடலாம். – என்று உள்ளது. (உ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய கூட்டு ஒன்றைத் தயார் செய்து விட்டார் சஜித்.

ஒரு கட்சியின் (ஐ.தே.கவின்) சிரேஷ்ட தலைவராக இருந்து கொண்டு, அக்கட்சியின் சட்ட ரீதியான – உத்தியோகபூர்வ – அனுமதியின்றி, பிறிதொரு பதிவு செய்யப்பட்ட கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றமை தவறு என்று சுட்டிக்காட்டி, அதனடிப்படையில் சஜித் மீது ஐ.தே.கட்சி விரோதச் செயற்பாட்டுக்காக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதா? அல்லது சஜித் உருவாக்கியுள்ள புதிய கூட்டமைப்பில் வேறு வழியின்றி ஐ.தே.கட்சியுடன் போய், சஜித்தின் கீழ் இணைவதா?

– இப்படி இரண்டில் ஒன்றை இன்று முடிவு செய்ய வேண்டிய இக்கட்டில் இருக்கின்றார் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

என்ன செய்யப் போகின்றார் ரணில்? Make or Break என்று ஒரு முடிவை எடுக்க வேண்டிய நெருக்கடி இன்று அவருக்கு.

அதற்கு முன்னேற்பாடாக அவரது வலது கையும் அவரது தலைமையின் கீழ் கட்சியின் செயலாளராகப் பணியாற்றுபவருமான அகிலவிராஜ் காரியவசம் எம்.பி. நேற்று கட்சியின் மற்றைய எம்.பிக்களை ஒவ்வொருவராகத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிக் கொண்டிருந்தார்.

சஜித்தின் கூட்டணியில் கட்சித் தலைவர் ரணில் இணையாவிட்டால் நீங்கள் எந்தப் பக்கம் போவீர்கள் என்பதே அகிலவிராஜ் காரியவசம் தமது கட்சி எம்.பிக்கள் ஒவ்வொருவரிடமும் அறிய விரும்பிய விடயமாக இருந்தது.

அகிலவிராஜ் திரட்டிய தகவல்கள், புள்ளிவிவரங்களின் அடிப்படையில் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று தீர்மானம் ஒன்றை எடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ரணிலும், சஜித்தும் தனித்தனி வழி போனால், சஜித்தின் சின்னம் எது என்ற விடயத்தில் இன்னும் குழப்ப நிலை நீடிக்கும் எனத் தெரிகின்றது.

அன்னம் சின்னத்தைக் கைவசம் வைத்திருக்கும் தரப்பை ரவி கருணாநாயக்கா தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

ஆகையினால் ரணில் பக்கம் அணி சேர்ந்திருக்கும் ரவி கருணாநாயக்காவை மீறி அந்தச் சின்னத்தை சஜித் பெறுவது கஷ்டமாக இருக்கும் எனக் கூறப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில், இன்றைய சூழலில், சஜித் அணி தனிவழி செல்லுமானால், தான் இப்போது தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கட்சியின் தொலைபேசிச் சின்னத்தையே சஜித் தரப்பு பயன்படுத்த வேண்டியிருக்கும். அப்படி இல்லாவிட்டால், திங்கள் இரவு நாடாளுமன்றக் கலைப்பு உத்தியோகபூர்வமாக வந்த பின்னர், தேர்தல்கள் ஆணையாளரின் பரிவுடன் தொலைபேசிச் சின்னத்தை இதயம் சின்னமாக மாற்ற வேண்டியிருக்கும்.

யானையா? அன்னமா? தொலைபேசியா? இதயமா? – எதில் போட்டியிடப் போகின்றது சஜித் அணி? தேர்தல் அறிவிக்கப்படும் சூழல் உருவான பின்னரும் கூட இது குறித்துத் தீர்க்கமான முடிவு எடுக்க முடியாத இக்கட்டில்தான் சஜித் அணியும் தள்ளாடுகின்றது.

இந்தத் தள்ளாட்டத்துக்கு இன்று கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் முடிவு கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

காதில் பூச்சுற்றுவது என்றால் இலங்கையைக் கேட்டுத்தான் செய்ய வேண்டும் போல. அப்படி அதில் கில்லாடியாக இருக்கிறது இலங்கைத் தரப்பு.

யுத்தம் முடிந்து பத்து ஆண்டுகள் கழிந்து விட்டன. பொறுப்புக் கூறல் விவகாரம் ஓர் அங்குலம் கூட முன்னேறவில்லை.

இப்போது ஜெனீவாத் தீர்மானத்தில் இருந்து ஒரு தலைப்பட்சமாக வெளியேறியுள்ள இலங்கை புதிய பொறிமுறை என்று கதை விடுகின்றது. அந்தப் பொறிமுறை என்ன தெரியுமா?

உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவரைக் கொண்ட ஓர் ஆணைக்குழுவை நியமிப்பதுதான்.

இதுவரை நடைபெற்றவை குறித்தெல்லாம் விவரமாக விசாரித்து, இனி என்ன செய்ய வேண்டும் என்ற பரிந்துரையை அந்த ஆணைக்குழு செய்யுமாம். அதன்படி பின்னர் இலங்கை நடவடிக்கை எடுக்குமாம்!

– இப்படி காதில் பூச்சுற்றில் விளக்கத்தைத் தந்திருக்கின்றார் ஆளும் பொதுஜன பெரமுன கட்சியின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ்.

பத்தாண்டுகள் முடிந்த பின்னரும், இனி என்ன செய்வது என்பதை மீள மிக விவரமாக ஆராய்ந்து முடிவு செய்வதற்கு ஒரு விசாரணைக்குழு. அதன் பேரில் ஒரு மூன்று, நான்கு

ஆண்டுகள் ஓட்டிவிட்டால் மொத்தம் பதினைந்து ஆண்டுகள் கடந்து விட்டன என்று கூறி விவகாரத்தை நிரந்தரமாகக் கிடப்பில் போட்டுவிடலாமென்ற கருத்துத் தான் போல!

– மின்னல் –

## பாரதூரமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இருவாரங்களுக்கு முன்னர் நான் அங்கு(ஜெனீவா) சென்று உறுப்பு நாடுகளுடன் பேசினேன். அப்போது நான் அவர்களுக்கு இந்த எச்சரிக்கையை விடுத்திருந்தேன். இப்படி அவர்கள் ஐ.நா. தீர்மானத்தில் இருந்து விலகக் கூடும், அப்படி அவர்கள் செய்தால் அந்தத் தீர்மானங்களின் உத்தியோகபூர்வ நிலை என்ன என்பது குறித்து உறுப்பு நாடுகள் உலகத்துக்கு வெளிப்படுத்த வேண்டும் என்றும் நாம் சொல்லியிருந்தோம்.

உள்நாட்டுப் பொறிமுறை எதையுமே செய்யாத நிலையில் தான் சர்வதேச விசாரணை ஒன்று வந்தது. கலப்பு நீதிமன்றப் பொறிமுறையை ஏற்படுத்தி அதன்படி செயற்படுவோம் என இலங்கை அரசும் இணங்கி வந்தது. ஆனாலும் நல்லாட்சி அரசு கூட தனது நான்கரை வருட காலத்துக்குள் அந்தக் கலப்பு நீதிமன்றப் பொறிமுறையை ஏற்படுத்தவில்லை.

இப்போது வந்துள்ள புதிய அரசு, நாங்கள் இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த மாட்டோம், நாங்கள் ஒரு சுயாதீனமான நாடு, இறைமையுள்ள நாடு, எங்கள் நாட்டுச் சட்ட திட்டத்துக்கு அமைவாகச் சில விடயங்களைச் செய்வோம் என்று சொல்லியுள்ளார்கள்.

இலங்கை விடயத்தில் ஐ.நா. உறுப்பு நாடுகள் வேறு மாற்று வழிகளையும் உபயோகிக்க வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இரு வருடங்களுக்கு முன்பே சொல்லிவிட்டார். அதனை இப்போது சவேந்திர சில்வா விடயத்தில் முதலில் செய்திருக்கின்றது அமெரிக்கா. அதனை இனி ஏனைய உறுப்பு நாடுகளும் செய்யும். இனி வரும் ஒரு வருட காலத்துக்குள் இந்த மாற்று வழிகளை நாங்கள் காணலாம்.

இலங்கை அரசின் முடிவு நாட்டுக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். சவேந்திர சில்வா போன்று வேறு ஆள்களுக்கு எதிராகவும் பயணத் தடை வரலாம்.

தேர்தலில் பெரும்பான்மை மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக இலங்கை அரசு எடுத்த இந்த முடிவு அவர்களுக்குப் பாரிய அச்சுறுத்தலாகவே அமையும். அது எங்களுக்கு நன்மையளிக்கக் கூடும்.

ஒரே நாட்டுக்குள் வாழ்வதற்கு நாம் தயார். ஆனால் நாம் இரண்டாம் தரப் பிரஜைகளாக வாழ்வதற்குத் தயாரில்லை. அவர்கள் எங்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தினால் நாங்கள் பிரிந்து செல்வதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை – என்றார். (ஐ)

## சனல் 4...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சனல் – 4 தொலைக்காட்சியின் ஊடகவியலாளர் ஜோன்ஸ்னோ கொரோனா தொற்றுக்கு இலக்காகியுள்ளார் எனச் சர்வதேசச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சரணடைந்தவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமை உள்ளிட்ட பல போர்க்குற்றங்களைச் சனல் 4 தொலைக்காட்சி பகிரங்கப்படுத்தியிருந்தது.

அந்தத் தொலைக்காட்சியின் ஊடகவியலாளர் ஜோன் ஸ்னோ தயாரித்த 'இலங்கையின் கொலைக்களங்கள்' ஆவணத் தொகுப்பு இலங்கையில் மட்டுமல்ல, உலகளவில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியிருந்தது.

ஈரானில் தேர்தல் பணிக்காகச் சென்றிருந்த ஜோன் ஸ்னோ கடந்த வாரம் பிரிட்டன் திரும்பியிருந்தார். எனினும், இன்னும் அவர் பணிக்குத் திரும்பவில்லை.

அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக, நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகச் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ)

## காரைநகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரைநகர் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய திருமதி உஷா சுபலிங்கம், தென்மராட்சிப் பிரதேச செயலாளராக இடமாற்றம் பெற்ற நிலையிலேயே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையில் உதவிச் செயலாளராகக் கடமையாற்றிய மரியதாசன் ஜேகூ, மத்திய அரசுக்கு மாற்றலாகி காரைநகர் பிரதேச செயலாளராக நேற்றுப் பதவியேற்றார்.

அத்துடன் தென்மராட்சிப் பிரதேச செயலாளராக திருமதி உஷா சுபலிங்கம், நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

தென்மராட்சிப் பிரதேச செயலாளர் திருமதி தேவநந்தினி பாபு மாகாண சபைக்கு மாற்றலாகிச் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழ். சென்னை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை காலமும் வாரத்தில் மூன்று நாள்கள் மட்டுமே விமான சேவைகள் இடம்பெற்று வந்த நிலையில் நேற்று முதல் வாரத்தில் 7 நாள்களும் சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## ஐ.நாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திலிருந்து விலகுவதாக இலங்கை அறிவித்துள்ள நிலையில், இலங்கையின் இந்த ஒருதலைப்பட்ச தீர்மானத்திற்கு மனித உரிமை கவுன்ஸிலிடமிருந்து வலுவான பதில் நடவடிக்கை அவசியம்.

– இவ்வாறு சர்வதேச மன்னிப்புச்சபையின் தென்னாசியாவிற்கான ஆய்வாளர் தயாகி ருவான்பத்திரன தெரிவித்துள்ளார்.

இலங்கையை பொறுத்தவரையில் தோல்வியடைந்த உள்நாட்டுப் பொறிமுறைகள் தொடர்பான நீண்ட வரலாறு உள்ளது என தெரிவித்துள்ள அவர் தொடர்ச்சியான தோல்விகள் மனித உரிமை மீறல்களிற்கு உள்ளானவர்களிற்குக் கசப்பான ஏமாற்றத்தை அளித்துள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

இவர்களில் பலர் பலவருடங்களாக நீதிக்காக காத்திருந்தபோதிலும் அது சாத்தியமாகவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அவர்களுக்கு நம்பக்கூடிய வலுவான சர்வதேச பொறிமுறையே அவசியம்.

அண்மைய வருடங்களில் பெறப்பட்ட, குறிப்பிடத்தக்க, மட்டுப்படுத்தப்பட்ட பலாபலன்கள் இழக்கப்படும் அபாயம் உள்ளது எனச் சுட்டிக்காட்டியுள்ள அவர் சிவில் சமூகம் செயற்படுவதற்கான சூழலும் கடந்த சில மாதங்களில் இலங்கையில் குறைவடைந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போர்க்குற்ற விவகாரம் தொடர்பாக இலங்கையின் உயர் நீதிமன்ற நீதியரசர் தலைமையிலான விசாரணை ஆணைக் குழுவை இலங்கை நியமிக்கும் என நேற்று முன்தினம் இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன ஜெனீவாவில் மனித உரிமைகள் கவுன்ஸிலில் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் கவுன்ஸிலின் 43 ஆவது அமர்வில் நேற்று இலங்கை குறித்த அறிக்கையை முன்வைத்துப் பேசிய மிச்செல் பச்லெட் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நிராகரித்தார்.

"பொறுப்புக்கூறலை நிலைநாட்டுவதில் உள்நாட்டு செயன்முறைகள் கடந்த காலங்களில் தொடர்ந்து தோல்வியுற்றன. எனவே மற்றொரு விசாரணை ஆணைக்குழுவை அமைப்பது என்பது இந்த செயன்முறையை முன்னோக்கிக் கொண்டுசெல்லும் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை" – என அவர் கூறினார்.

அத்தோடு இதன் விளைவாக, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி மறுக்கப்படுகிறது. அனைத்து சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்கும் மீண்டும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, ஐ.நா.வின் 30/1 தீர்மானம் குறித்து புதிய அரசாங்கம் மிகவும் மாறுபட்ட அணுகுமுறையை அறிவித்திருப்பதற்கு அவர் கவலை தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த அறிவிப்பையடுத்து, நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை முன்னேற்றுவதற்கான முயற்சிகளைத் தடுக்கும் அபாயங்கள் உள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் தனது அனைத்து மக்களுக்காகவும் செயற்பட வேண்டும். அனைத்து சமூகங்களின் தேவைகளையும், குறிப்பாக சிறுபான்மையினரையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். கடந்த சில ஆண்டுகளாகக் கிடைத்த நன்மைகளைப் பாதுகாக்கவும் கட்டியெழுப்பவும் நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, காணாமற்போனோர் அலுவலகம் மற்றும் இழப்பீட்டு அலுவலகம் ஆகியவை அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான ஆதரவை வழங்குவதை உறுதி செய்ய அரசாங்கத்தை கோருகின்றேன். அனைத்து சமூகங்களைப் போலவே நீதி மற்றும் நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ள காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கும் தகுதி உள்ளது எனவும் அவர் கூறினார்.

இலங்கையின் சுயாதீன நிறுவனங்கள், 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் பலப்படுத்தப்பட்டுள்ளன. இது ஜனநாயகக் கட்டமைப்பில் ஒரு முக்கிய தூணாகும். மேலும் சிவில் சமூகம் மற்றும் சுயாதீன ஊடகங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் அல்லது ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளின் கீழ் மக்களின் செயற்பாடுகளை நகர்த்துவதற்கான சமீபத்திய போக்கு குறித்து நான் கவலையடைகின்றேன். மேலும் மனித உரிமை அமைப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் மீதான கண்காணிப்பு போன்ற புதிய அறிக்கைகளும் சிறுபான்மையினருக்கு எதிரான வெறுக்கத்தக்க பேச்சு, பாதுகாப்பு அச்சுறுத்தல், சிறுபான்மையினருக்கு எதிரான கொள்கை நடவடிக்கைகள், தமிழ் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிரான பாரபட்சம் குறித்து வெளிப்படுத்துகிறது என்றும் அவர் கூறினார்.

கடந்த கால மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களுக்கான தண்டனையை இலங்கை இன்னும் வழங்கவில்லை. அல்லது இவற்றை நிவர்த்தி செய்யத் தேவையான பாதுகாப்பு துறை குறித்த சீர்திருத்தங்களையும் மேற்கொள்ளவில்லை என்பதே அடிப்படைப் பிரச்சினையாக உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவை குற்றவியல் நீதி முறைமைக்குள் தொடர்ந்து நிலவும் பிரதான தடையாக உள்ளன என மிச்செல் பச்லெட் குறிப்பிட்டுள்ளார்.

## சஜினுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணத்தைக் கையகப்படுத்தியதன் ஊடாகப் பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் இழைத்துள்ளார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தனவை மார்ச் மாதம் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்றுக் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி, இந்த வழக்கின் பிரதிவாதி சாட்சியாளர்களுக்கு அழுத்தம் கொடுத்தார் என முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

இதனால் பிரதிவாதி பிணையில் வெளியில் இருந்தால் சாட்சி விசாரணைக்குத் தடை ஏற்படும் என்பதால் அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடுமாறு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

அந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட நீதிபதி அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ)

## லீசிங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசியமையால் மனமுடைந்து போன 5 பிள்ளைகளின் தாயார் தனது உயிரை மாய்த்துக்கொண்டார் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் தாவடி தெற்கில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த சுவிதன் அனுசுயா (வயது–34) என்பவரே இவ்வாறு தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டார். அவருக்கு 5 பிள்ளைகள். முதலாவது பிள்ளைக்கு 10 வயது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

அவரது விசாரணையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு;

கணவர் லீசிங் முறையில் மோட்டார் சைக்கிளை எடுத்துள்ளார். அதற்குரிய தவணைக் கட்டணங்களை அவர் செலுத்தத் தால் லீசிங் நிறுவனத்தின் பணியாளர்கள் அவரது வீட்டுக்கு நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை சென்றுள்ளனர்.

கணவர் கிளிநொச்சிக்கு வேலைக்குச் சென்றிருந்த நிலையில் மனைவி அங்கு இருந்துள்ளார். லீசிங் பணத்தை ஒழுங்காகச் செலுத்தாதமையால் மோட்டார் சைக்கிளை பறிமுதல் செய்ய வந்துள்ளார்கள் என அவர்கள் குறிப்பிட்டனர்.

எனினும் கணவர் வேலைக்குச் சென்றுள்ளார் என்றும், இரண்டு நாள்கள் தவணையில் நிலுவைப் பணத்தைச் செலுத்துவதாகவும் மனைவி கேட்டுள்ளார்.

அதற்குப் பணியாளர்கள் அவரைத் தரக் குறைவாகப் பேசியுள்ளனர். அதனால் இரு தரப்புக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இதனை அயலவர்கள் கண்டுள்ளனர். அதனால் மனமுடைந்த பெண் தூக்கிலிட்டு உயிரை மாய்த்துக்கொண்டார் –என்று தெரிவிக்கப்பட்டது.(ஐ–07)

## காரைக்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மெனவும் இந்திய மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

இரு வழிக் கப்பல் கட்டணம் நூறு டொலருடன் வரிகள் சேர்ந்ததாக இருக்குமென சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

விமான நிலைய வரியாக இலங்கை ஒரு பயணிக்கு அறுபது டொலர் அறவிடுகிறது. கப்பல் பயணிகள் விடயத்தில். இந்தக் கட்டணத்தை விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரசு குறைக்குமா என்பது தெரியவில்லை.

இலங்கையின் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை துறைமுகத்தில் இருந்து புதுச்சேரி மாநிலம் காரைக்கால் துறைமுகத்திற்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்குவது தொடர்பாக புதுச்சேரித் தலைமை செயலகத்தில் மத்திய கப்பல் போக்குவரத்து இணை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தலைமையில் ஆலோசனை கூட்டம் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் புதுச்சேரி மாநில துறைமுகத்துறை அமைச்சர் கந்தசாமி, சுற்றுலாத் துறை அமைச்சர் மல்லாடி கிருஷ்ணா ராவ், எம்.பிக்கள் வைத்தியலிங்கம், கோகுலகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் அஸ்வனி குமார், காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அர்ஜுன் சர்மா, இந்தியக் கடலோரக் காவல்படை அதிகாரிகள் மற்றும் இந்திய, இலங்கை துறைமுகத்துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

கூட்டத்திற்குப் பிறகு செய்தியாளர்களைச் சந்தித்த மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்தவை வருமாறு: –

இலங்கையின் யாழ்ப்பாணத் துறைமுகத்திலிருந்து புதுச்சேரியின் காரைக்கால் துறைமுகத்திற்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்குவது தொடர்பாக கடந்த நான்கு ஆண்டுகளாக ஆலோசிக்கப்பட்டு வந்த நிலையில், இன்னும் மூன்று வாரத்தில் கப்பல் போக்குவரத்து தொடங்கப்பட உள்ளது.

இதன் மூலம் ஆன்மீக பயணமாகப் புதுச்சேரிக்கு இலங்கையிலிருந்து அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவார்கள். இதனால் சுற்றுலா மற்றும் தொழில்துறை வளர்ச்சிப் பெறும். காரைக்காலில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு 3 மணி நேரத்தில் சென்றுவிட முடியும். இதற்கான கட்டணம் 7 ஆயிரம் ரூபாய் வரை இருக்கும். – என்றார்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## இலங்கையின் நடவடிக்கைக்கு மேற்குலகின் பிரதிபலிப்பு என்ன?

"எந்த ஒரு விடயத்தையும் பிளான் பண்ணிப் பண்ணனும்" என்பார் ஒரு படத்தில் நகைச்சுவை நடிகர் வடிவேல்.

ஜெனீவா ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கையும் சேர்ந்து அனுசரணைப் பணி வகித்து நிறைவேற்றிய தீர்மானத்தில் இருந்து, புதிய இலங்கை அரசு வெளியேறத் தீர்மானித்து, அதற்கான நடவடிக்கையை முன்னெடுத்தது.

வெளியேறுவது பற்றி அறிவிப்பு கவுன்ஸிலில் கடந்த புதனன்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவினால் உத்தியோகபூர்வமாக விடுக்கப்பட்டு விட்டது.

இந்த அறிவிப்பை கனகச்சிதமாக 'பிளான் பண்ணித் தான்' இலங்கை அரசு முன்னெடுத்திருக்கின்றது போலும்.

இந்தத் தீர்மானத்தின் அனுசரணைப் பணியிலிருந்து வெளியேறும் முடிவுக்கு இலங்கை காட்டும் காரணங்கள் மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் விவகாரங்களாக இருக்கின்றன. அதனைப் பார்க்கும் போதுதான் 'பிக்காலித்தனம் பண்ணுவதையும் பிளான் பண்ணிப் பண்ணுவது' என்று தத்துவம் புரிகின்றது.

இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் 2015 இல் நிறைவேற்றப்பட்ட 30/01 இலக்கத் தீர்மானத்துக்கு இலங்கை அனுசரணைப் பணி வகித்தமையால், இலங்கையின் தேசியப் பாதுகாப்புப் பலவீனமடைந்து, அதன் விளைவாக கடந்த ஏப்ரலில் நாட்டில் ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாம். இது, கவுன்ஸிலில் இப்போது இலங்கை முன்வைத்திருக்கும் புதிய கண்டுபிடிப்புப் பற்றிய தகவல்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் முன்னைய இலங்கை அரசு அளித்த வாக்குறுதிகள் இலங்கையின் பாதுகாப்புப் பலவீனப்படக் காரணமாயிற்று. அதுவே ஈஸ்டர் ஞாயிறுக் கொடூரத்துக்கும், அதனால் ஏற்பட்ட பேரிழப்புக்களுக்கும் அடிப்படையாகும் என்று கடந்த புதனன்று கவுன்ஸிலில் உரையாற்றிய இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மொட்டந்தலைக்கு முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டிருக்கின்றார்.

'கேட்பவன் கேனையனாக இருந்தால் கேப்பையிலும் நெய் வடியும் என்பார்கள்' – என்று ஒரு பேச்சு மொழி வழக்கு நம் மத்தியில் உண்டு. சர்வதேச அரங்கு ஒன்றில் போய் நின்று கொண்டு அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா கூறுகின்ற மேற்படி கருத்தைக் கேட்கும் போது இப்படித்தான் எமக்கு எண்ணத் தோன்றுகின்றது.

இந்தத் தீர்மானத்திலிருந்து வெளியேறித் தப்பி, பொறுப்புக் கூறலில் இருந்து கழன்று கொள்வதற்கு இத்தகைய பல காரணங்களை – சளாப்பல்களை – அளாப்பல் கூற்றுக்களை– கொழும்பு முன்வைக்க முடியும்.

ஆனால், பாதிக்கப்பட்ட தமிழர்களாகிய நாம் இதனை எதிர்கொள்வதற்கு ஒன்றுபட்டு, ஒரே சக்தியாய் – ஒரே தேசமாய் – எழுச்சி கொள்ள வேண்டும். அது தவிர்க்க முடியாத வரலாற்றுக் காலகட்ட அவசியமாகும்.

ஜெனீவாத் தீர்மா னத்திலிருந்து இலங்கை வெளியேறுவது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், மேற்படி முடிவு துரதிஷ்டவசமானது என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் இந்த முடிவு தொடர்பில் கனடாவும், அமெரிக்காவும் ஏற்கனவே கடும் அதிருப்தியும், விசனமும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தீர்மானத்திலிருந்து வெளியேறியதாக அறிவிப்பதன் மூலம் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் புரியப்பட்ட மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகள், யுத்தக் குற்றங்கள் போன்றவற்றுக்குப் பொறுப்புக் கூறுவதினின்றும் தப்பி விடலாம் என்பது கொழும்பு புதிய அரசின் எண்ணம், நம்பிக்கை, எதிர்பார்ப்பு எல்லாம்.

ஆனால், பொறுப்புக் கூறல் என்ற வலிதான கடப்பாட்டில் இருந்து கொழும்பு அவ்வளவு இலகுவாக ஓடித் தப்பி, ஒழிந்து விட முடியாது என்பதுதான் யதார்த்தம்.

அப்படித் தப்புவதற்கு இலங்கைக்கு அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஐரோப்பிய ஒன்றியம் போன்றவை இடமளிக்குமானால் இந்த விடயத்தில் அவற்றின் முயற்சியும் எதிர்பார்ப்பும் பெருந்தோல்வி என்றே அர்த்தமாகும்.

ஆகவே, இத்தகைய அறிவிப்பு ஒன்றின் மூலம் இலங்கை பொறுப்புக் கூறலில் இருந்து இலகுவில் விலகி விட முடியாது.

அதை இலங்கைக்கு உணர்த்தும் வகையில் மேற்குலகம் தனது பிரதிபலிப்பைக் காட்டும் என எதிர்பார்க்கலாம்.

விரைவில் அது வெளிப்படலாம். ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் தற்போதைய கூட்டத் தொடரிலேயே அத்தகைய பிரதிபலிப்பு மேற்குலகினால் வெளிப்படுத்தப் பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்படிச் சொய்வது தான் இந்த விடயத்தில் இலங்கையின் போக்குக்கும் சரியான பதிலடியாக இருக்க முடியும்.

# இந்திய மீனவர் அத்துமீறல்களுக்கு எதிராக தீவக மக்கள் போராட்டம்!



யாழ்ப்பாணம், பெப். 28

அத்துமீறி இடம்பெறும் இந்திய இழுவைப் படகு மீன்பிடித் தொழிலைத் தடை செய்ய வலியுறுத்தித் தீவக மீனவர்கள் யாழ். நகரில் ஆர்ப்பாட்டப் பேரணியை முன்னெடுத்தனர்.

யாழ்.பண்ணைப் பகுதியில் இருந்து நேற்று வியாழக்கிழமை காலை ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பேரணி, நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் மகஜர் கையளிக்கப்பட்ட பின்னர், அங்கிருந்து காங்கேசன்துறை வீதி வழியாக கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகம் வரை சென்று அங்கு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

அங்கு அமைச்சரின் பிரதிநிதிகளிடம் மகஜர் ஒன்றையும் கையளித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து, இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவர் அலுவலகத்துக்குச் சென்று, அங்கும் தூதுவரிடம் மகஜர் கையளித்தனர்.

இந்திய இழுவைப் படகின் அத்துமீறலால் தொழில்கள் பாதிக்கப்படுவதுடன் தமது பிள்ளைகளின் எதிர்காலமும் பாதிக்கப்படுவதாக இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

எனவே, இந்திய இழுவைப் படகின் அத்துமீறிய தொழில் முறையைத் தடை செய்யுமாறும், வளங்களைச் சூறையாடுவதைத் தடை செய்யுமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ–07)




# மன்னார் மீனவர்கள் ஐந்து பேர் இந்தியக் கடற்படையால் கைது

*மன்னார், பெப். 28*

*மன்னார் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்க சென்ற ஐந்து மீனவர்கள் தனுஷ்கோடி அருகே இந்திய எல்லைக்குள் மீன்பிடித்து கொண்டிருந்த குற்றச்சாட்டில் இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*சர்வதேச கடல்எல்லையில் ரோந்துப் பணியில் ஈடுபட்டு கொண்டிருந்த இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர் எல்லை தாண்டி மீன்பிடித்த மீனவர்களை அவதானித்தையடுத்து, அவர்கள் படகுடன் கைது செய்யப்பட்டு ராமேஸ்வரம் மரைன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.*

*ஒப்படைக்கப்பட்ட மீனவர்கள் மீது வழக்கு பதிவு செய்த மரைன் பொலிஸார் அவர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஐ)*

# 28 லட்சம் ரூபாவை பெண்ணிடம் அபகரித்த நபர் விளக்கமறியலில்!

பெண் ஒருவரின் வங்கி அட்டையை வஞ்சகமான முறையில் பெற்று 28 லட்சம் ரூபா பணத்தை மோசடி செய்த சந்தேக நபர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவம் பதுளையில் இடம்பெற்றுள்ளது.

புத்தளம் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் தனக்குச் சொந்தமான கட்டடமொன்றை விற்பனை செய்து அதன் மூலம் கிடைத்த ஒரு கோடியே 50 லட்சம் ரூபாவை வங்கியில் வைப்பிலிட சந்தேக நபரின் உதவியை பெற்றுக் கொண்டுள்ளார். இதன்பின்னர் வங்கி அட்டையை சந்தேக நபர் வஞ்சகமான முறையில் பெற்றுக்கொண்டுள்ளார்.

பின்னர் சந்தேக நபர் பல தடவைகள் அந்தப் பெண்ணின் வங்கிக் கணக்கிலிருந்து பணத்தை மீளப் பெற்றுள்ளார். இதுவரை அவ்வாறு எடுக்கப்பட்ட பணத்தொகை 28 லட்சம் ரூபாவாகும் என பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பெண் பணம் மீளப்பெறுவதற்காக வங்கிக்குச் சென்றிருந்த போதே இது தொடர்பில் தெரியவந்துள்ளது. சந்தேக நபர் தொடர்பில் தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கப் பெறாத நிலையில் அந்தப் பெண்ணும் சுகவீனமடைந்துள்ளமையால் தொலைபேசி ஊடாக சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து உடனடியாக பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளனர். சந்தேக நபர் மோசடி செய்த பணத்தில் பஸ் ஒன்றைப் புதிதாகக் கொள்வனவு செய்திருந்தார் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

## நாளை

29.02.2020 – சனிக்கிழமை

நட்சத்திரம்: பரணடி பி.இ. 04.10 வரை
திதி : பஞ்சமி காலை 07.00 வரை
இராகுகாலம் : 09.28 – 10.58
சுப நேரம் : 03.28 – 04.58

# இலங்கை அரசின் மீது சர்வதேச விசாரணை!

## மனித உரிமை கண்காணிப்பகம் வலியுறுத்தல்

கொழும்பு, பெப். 28

போர்க்குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள ராஜபக்ஷாக்கள் பொறுப்புக்கூறுதலை முன்நகர்த்துவதற்கான எந்த வாய்ப்பும் இல்லை என்பதால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸில் இலங்கை மீது சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும். என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஜெனீவாவுக்கான இயக்குநர் ஜோன் பிசர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் தீர்மானங்களுக்கான இணை அனுசரணையிலிருந்து விலகுவதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன உத்தியோகபூர்வமாக அறிவித்த பின்னரே ஜோன் பிசர் தனது டுவிட்டரில் மேற்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸில்தீர்மானங்களுக்கான இணை அனுசரணையிலிருந்து இலங்கை வெளியேறுகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார். பாதிக்கப்பட்டவர்கள் எவரும் ஏமாறக்கூடாது. போர்க்குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள ராஜபக்ஷாக்கள் பொறுப்புக்கூறுதலை முன்நகர்த்துவதற்கான எந்த வாய்ப்பும் இல்லை. எனவே, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸில் இலங்கை மீது சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். (ஐ)



# புதிய கூட்டணி தொடர்பாக சஜித் முடிவெடுக்க முடியாது

## மீண்டும் சன்னதம் கொள்கிறார் ரணில்



கொழும்பு, பெப். 28

சஜித் பிரேமதாஸ தலைமையிலான புதிய கூட்டணி தொடர்பான அனைத்து முடிவுகளும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தின் இறுதி முடிவாகவே இருக்கவேண்டும் என அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சமகி ஜன பலவேகய, சிறு அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் எதிர்வரும் 2 ஆம் திகதி உத்தியோகபூர்வமாகக் கையெழுத்திடப்படவுள்ளது என சஜித் பிரேமதாஸ நேற்று முன் தினம் அறிவித்திருந்தார்.

குறிப்பாக பல கட்சிகளின் ஆதரவை தாங்கள் பெற்றுள்ளன எனவும் அதன் பிரகாரம் எதிர்வரும் 2 ஆம் திகதி ஒப்பந்தம் கைச்சத்திடப்படும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை இவ்வாறு செய்துகொள்ளப்படவுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவில் ஒப்புதல் வழங்கப்படவேண்டும் என ரணில் விக்கிரமசிங்க சஜித் பிரேமதாஸவுக்குத் தெரிவித்துள்ளார் என அறிய முடிகின்றது.

புதிய கூட்டணியின் யாப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் சட்டத்தரணிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் சில மாற்றங்களை முன்மொழிந்து அதைப் பிரேமதாஸவிடம் ஒப்படைத்தனர்.

இருப்பினும் இந்த முன்மொழிவுகளுக்கு இன்னும் சஜித் பிரேமதாஸ பதிலளிக்கவில்லை என்றும் அறியமுடிகின்றது.

ஆனால் முன்மொழியப்பட்ட மாற்றங்களுக்குப் பிரேமதாஸ பதிலளிக்க வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார் என்றும் அவருக்கு நெருக்கமான வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், பெப். 28

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை **காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை-**

**யாழ் பிரதேசத்தில் -**

கே.கே.எஸ். வீதி நாவலர் வீதி சந்தியிலிருந்து புகையிரதக்கடவை வரை, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி வீதி, Mega Mall Super Market கார்கில்ஸ் பி. எல். சி. செலிங்கோ லைவ் இன்சூரன்ஸ் லமிற்ரெட், பண்டத்தரிப்பு, பாணாவெட்டி. காஞ்சிபுரம், நுணசை, மாதகல், குசுமாந்துறை, யம்புகோளப்பட்டினம், காட்டுப்புலம், யம்புகோளப்பட்டினம் Rest House, அல்வாய், மாலுசந்தி, வியாபாரிமூலை, இன்பருட்டி. சுப்பர்மடம், நாவலடி, லங்கா பாடசாலை. பருத்தித்துறை நகரம், சாரையடி, கிராமக்கோடு. கல்லூரி வீதி. ஷானி வீதி, தம்பசிட்டி, சாளம்பை. சுப்பர் மடம் மரின்வெல்த் ஐஸ் தொழிற்சாலை, மந்திகை ஆதார வைத்தியசாலை, கல்வயல், மட்டுவில் முத்துமாரி அம்மன் கோவிலடி, சந்திரபுரம், சரசாலை, கனகம்புளியடிச்சந்தி, நாவற்குழி, கோகிலாக்கண்டி, தச்சன்தோப்பு, மறவன்புலவு, தனங்கிளப்பு, அறுகுவெளி, கைதடி, நுணாவில், Link Readymix (Pit) Ltd. பனை அபிவிருத்தி சபை, சித்த மருத்துவ பீடம், United Motors Lanka Plc, Excello Holding (Pit) Ltd, வடமாகாண ஆளுநர் அலுவலகம், Metro Housing Construction (Pvt) Ltd, Narayana cement production, Sanken Construction (Pvt)Ltd ஆகிய இடங்களிலும்–

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

கண்ணகிபுரத்திலும் –

**வவுனியாப்பிரதேசத்தில் -**

சாம்பல்தோட்டம், சூடுவெந்தபுலவு கிராமம், இலுப்பைக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடை இருக்கும் என மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# வெலிகமவில் சூடு!

கொழும்பு, பெப். 28

வெலிகம மிரிஸ்ஸ பகுதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளாரெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்றது. சம்பவத்தில் காயமடைந்தவர் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த நபரின் வீட்டில் வைத்து இவ்வாறு துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பொலிஸார், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரயில் திணைக்கள அதிகாரி மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்!

கொழும்பு, பெப். 28

அநுராதபுரம் ரயில் நிலையத்தில் அதிகாரியொருவர் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வடக்கு – கிழக்குக்கான ரயில் கடவைகளுக்கான பாதுகாப்பு அதிகாரி மீதே பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் அநுராதபுரத்திலுள்ள ரயில் நிலையத்தில் அமைந்துள்ள தனது அலுவலகத்தில் உறங்கிக் கொண்டிருந்தவர் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (ஐ)

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com



# டெல்லிக் கலவரம் தொடர்கின்றது பலி எண்ணிக்கை 34 ஆக உயர்வு!

புதுடெல்லி,பெப்.28

வடகிழக்கு டெல்லியில் புதன் இரவும் கலவரம் ஏற்பட்டதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில் பலியானோர் எண்ணிக்கை 34 ஆக அதிகரித்துள்ளது.

குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு எதிராகவும், ஆதரவாகவும் போராட்டம் நடத்தி வருபவர்களுக்கு இடையே, டெல்லியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மோதல் வெடித்தது. இந்த மோதல் கலவரமாக உருவெடுத்ததை அடுத்து தொடர்ந்து நடைபெற்ற வன்முறை சம்பவங்களில் வீடுகள், கடைகள், வாகனங்கள் கல்வீசி தாக்கப்பட்டன.

சில வாகனங்கள், கடைகளுக்கும் தீ வைக்கப்பட்டது. இதையடுத்து டெல்லி பொலிஸார் மட்டுமின்றி, துணை இராணுவப் படையினர், அதிரடிப் படையினர் கலவரம் பாதித்த பகுதிகளில் குவிக்கப்பட்டனர்.

தற்போதுவரை லோக் நாயக் ஜெய்பிரகாஷ் நாராயண் மருத்துவமனையில் இருவரும், ஜேபிசி மருத்துவனையில் ஒருவரும் உயிரிழந்துள்ளனர். குருதேஜ் பகதூர் மருத்துவமனையில் 30 பேர் உயிரிழந்துள்ள நிலையில், அவர்களுள் ஒரு பெண் உட்பட 9 பேர் துப்பாக்கியால் சுடப்பட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 200க்கும் மேற்பட்டோர், படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வரும் நிலையில், காயமடைந்த பெரும்பாலானோர் கலவரக்காரர்களிடமிருந்து தப்பிக்கும் பொழுது கீழே விழுந்து காயமடைந்திருந்தனர் எனவும் கூறப்பட்டுள்ளது.

144 தடை உத்தரவு அமலில் உள்ள வடகிழக்கு டெல்லியில் தற்போது 45 கம்பெனி துணை இராணுவப்படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதனால் மவுஜ்பூர், ஜாப்ராபாத், சீலம்பூர், பார்பர்பூர் உள்ளிட்ட பகுதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. கலவரம் தொடர்பாக 106 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், 18 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சட்டம் – ஒழுங்கு, அமைதியை நிலைநாட்டும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் கலவரம் வெடித்த பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை ஆய்வு மேற்கொண்டார். அதன் பின்னர் நள்ளிரவில் மீண்டும் கலவரம் ஏற்பட்டதுவும், இரவு 12 மணி முதல் காலை 8 மணி வரை 19 அவசர அழைப்புகள் வரப்பெற்றன எனவும், தீயணைப்புத்துறை இயக்குநர் அதுல் கர்க் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து மூத்த அதிகாரிகள் அப்பகுதியில் சோதனை மேற் கொண்டனர் எனவும், 100க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் தீயணைப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் கூறப்பட்டது.

இதனிடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை சிஏஏ வுக்கு ஆதரவான பேரணியில், பா.ஜ.க. தலைவர் கபில் மிஸ்ரா சர்ச்சைக்குரிய கருத்துகளைத் தெரிவித்தமையை அடுத்து, கலவரம் வெடிக்க வாய்ப்பிருப்பதாக டெல்லி பொலிஸார் 6 முறை எச்சரிக்கை விடுத்தனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. கலவரத்துக்கு இடையே கடந்த திங்கள் என்று கஜூரி காஸ் பகுதியில் தேர்வெழுதச் சென்ற 8 ஆம் வகுப்பு மாணவி, காணாமல் போயுள்ளார்.

கலவரத்தை கட்டுப்படுத்த தவறியதால், டெல்லி பொலிஸில் பல்வேறு மாற்றங்களை உள்துறை அமைச்சகம் மேற்கொள்ள இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

# இந்திய பயணம் மிகப்பெரும் வெற்றி ஜனாதிபதி டிரம்ப் திருப்தி தெரிவிப்பு



வொஷிங்டன்,பெப்.28

இந்திய பயணம் மிகப்பெரும் வெற்றியாக அமைந்ததாக அமெரிக்கா சென்றபின் ஜனாதிபதி டிரம்ப் தகவல் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் முதல் முறையாக கடந்த 24 ஆம் திகதி இந்தியா வந்தார். அன்று ஆமதாபாத்தில் 'நமஸ்தே டிரம்ப்' உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அவர், பின்னர் ஆக்ரா சென்று தாஜ்மகாலை சுற்றிப்பார்த்தார்.

மறுநாள் டெல்லியில் பிரதமர் மோடி, ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் ஆகியோரை சந்தித்து பேசினார். அன்று ஜனாதிபதி மாளிகையில் இரவு விருந்தை முடித்துக்கொண்டு அவர் அமெரிக்கா புறப்பட்டார்.

அங்கு சென்று சேர்ந்தபின், இந்திய பயணம் குறித்து தனது டுவிட்டர் தளத்தில் சில கருத்துகளை அவர் பகிர்ந்திருந்தார். அதில் அவர் கூறும்போது, 'இந்தியா சிறப்பாக இருந்தது. இந்திய பயணம் மிகப்பெரும் வெற்றிகரமாக அமைந்தது' என்று குறிப்பிட்டு உள்ளார்.

# டெல்லிக் கலவர நிலைமையை ஐ.நா. செயலாளர் கண்காணிப்பு



டெல்லியில் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை ஒட்டி எழுந்துள்ள கலவரங்களை ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் உன்னிப்பாக கவனித்து வருகின்றார் எனக் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய பொதுச் செயலாளரின் செய்தித் தொடர்பாளர் ஸ்டீபன் டுஜாரிக், போராட்டக்காரர்கள் அமைதியாக போராட்டத்தை முன்னெடுக்க அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ஆனால், பாதுகாப்புப் படையினர் தங்களின் கட்டுக்குள் நிலைமை கொண்டுவர முயற்சி செய்கின்றனர் என்று கூறிய டுஜாரிக், டெல்லியில் நடந்து வரும் கலவரத்தைப் பொதுச் செயலாளர் அன்டோனியா குட்டெரெஸ் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றார் எனவும் கூறினார்.

# திருவானைக்காவலில் தங்கப் புதையல்

திருவானைக்காவல் ஜம்புகேஸ்வரர் – அகிலாண்டேஸ்வரி கோவிலில் தங்கப்புதையல் கண்டெடுக்கப்பட்டது. திருச்சியில் பிரசித்தி பெற்ற கோவில்களில் ஒன்று இது. தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் இக்கோவிலுக்கு வந்து வழிபட்டு செல்வது வழக்கம்.



இக்கோவில் வளாகத்தில் உள்ள கொட்டாரம் 100 கால் மண்டபம் அருகே உள்ள காலி இடத்தைத் தூய்மை செய்து அங்கு வாழைக்கன்றுகள் நடவும், பூச்செடிகள் வளர்க்கவும் முடிவு செய்யப்பட்டது. இதற்கான பணியில் நேற்று முன்தினம் கோவில் பணியாளர்கள் ஈடுபட்டிருந்தனர். .

அப்போது, கடப்பாரை, மண்வெட்டி உள்ளிட்ட ஆயுதங்களால் குழி தோண்டியபோது, வித்தியாசமாக சத்தம் கேட்டது. இதனையடுத்து அதனை மெதுவாக தோண்டிய போது, செம்பு பெட்டகம் ஒன்று தென்பட்டது. அந்த பெட்டகத்தை எடுத்து பார்த்தபோது, அதில் தங்கக்காசுகள் இருப்பதை கண்டு அனைவரும் ஆச்சரியம் அடைந்தனர்.

அந்த பெட்டகத்தில் 505 தங்கக்காசுகள் இருப்பதை அதிகாரிகள் உறுதி செய்தனர். அவற்றில் ஒரு தங்க காசு மட்டும் 10 ரூபாய் நாணயம் அளவிலும், மீதமுள்ள தங்கக்காசுகள் சட்டை பட்டன் அளவிலும் இருந்தன. இது 1 கிலோ 716 கிராம் எடைகொண்டதாகும். இதன் மதிப்பு ரூ.61 லட்சம் ஆகும். ஒவ்வொரு தங்க காசும் 3.3 கிராம் எடை உள்ளது. ஒன்று மட்டும் 10 கிராம் எடை உள்ளது என கூறப்படுகிறது.

# டெல்லிக் கலவரம் எதிரொலி; பாக். மக்களுக்கு எச்சரிக்கை

## பிரதமர் இம்ரான்கான் விடுத்தார்



இஸ்லாமாபாத்,பெப்.28

டெல்லிக் கலவரம் எதிரொலியாக, பாகிஸ்தான் மக்களுக்கு இம்ரான்கான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குடியுரிமை திருத்த சட்ட விவகாரத்தில் டெல்லியில் தொடர்ந்து வன்முறை சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. இது நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றது..

இந்த வன்முறை சம்பவங்களுக்கு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் கண்டனம் தெரிவித்து உள்ளார். இது தொடர்பாக அவர் தனது டுவிட்டர் தளத்தில் கூறுகையில், 'வெறுப்பு அடிப்படையிலான இனவாத சித்தாந்தங்கள் தலைதூக்கினால், அது ரத்தம் சிந்துதலையே ஏற்படுத்தும். இந்தியாவில் 20 கோடி முஸ்லிம்கள் வன்முறைக்கு இலக்காக்கப்பட்டு இருக்கின்றனர்' என்று குறிப்பிட்டு உள்ளார்.

மேலும் அவர், 'பாகிஸ்தானில் நமது முஸ்லிம் அல்லாத சிறுபான்மையினரையோ அவர்களது வழிபாட்டு தலங்களையோ யாரும் தாக்கினால், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கிறேன். நமது சிறுபான்மையினரும் சமமான குடிமக்களே' என்றும் கூறியுள்ளார்.

# பியர் தொழிற்சாலையில் சூடு! ஐந்து ஊழியர்கள் உயிரிழப்பு!!

## அமெ. விஸ்கான்சின் நகரில் சம்பவம்



வொஷிங்டன்,பெப்.28

அமெரிக்காவில் பியர் தொழிற்சாலையில் ஊழியர் ஒருவர் 5 சக ஊழியர்களை துப்பாக்கியால் சுட்டு கொலை செய்து விட்டு தானும் தற்கொலைச் செய்து கொண்டார்.

அமெரிக்காவின் விஸ்கான்சின் நகரின் மில்வாக்கியில் மோல்சன் கூர்ஸ் வளாகம் உள்ளது. இந்த வளாகத்தில் கார்ப்பரேட் அலுவலகங்கள் மற்றும் பியர் தயாரிக்கும் தொழிற்சாலை என இருபதுக்கும் மேற்பட்ட கட்டடங்கள் உள்ளன. அங்கு ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டு வந்தனர்.

அதில் பீர் தயாரிக்கும் தொழிற்சாலையில் மர்ம நபர்ஒருவர் தான்மறைத்து வைத்திருந்த துப்பாக்கியைக் கொண்டு அங்கிருந்த தொழிலாளர்களை குறிவைத்து கண்மூடித்தனமாக சுட்டார். இதனால் அதிர்ச்சியடைந்த தொழிலாளர்கள் அலறியடித்துக் கொண்டு அங்கும் இங்கும் ஓடினர்.

மர்மநபர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 5 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், பலர் படுகாயமடைந்துள்ளனர். துப்பாக்கி சூட்டில் ஈடுபட்ட 51 வயது நபர் தன்னை தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டர் எனக் கூறப்படுகிறது. இவர் அதே பியர் தயாரிக்கும் தொழிற்சாலையில் வேலைபார்த்து வந்த ஊழியர் என தகவல் வெளியாகி உள்ளது.

துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் பலியானவர்கள் குடும்பத்திற்கு ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் இரங்கல் தெரிவித்து உள்ளார்.

# 9 சிறுவர் உட்பட 20 அப்பாவிகள் சிரியாவில் வான் தாக்குதலில் பலி

டமாஸ்கஸ்,பெப்.28

சிரியாவில் பள்ளிக்கூடங்கள் மற்றும் ஆஸ்பத்திரி மீது நடத்தப்பட்ட வான்தாக்குதலில், 9 சிறுவர்கள் உள்பட 20 பேர் பலியாயினர்.

சிரியாவின் தென்மேற்கு பகுதியில் உள்ள இத்லிப் மாகாணத்தில் சிரிய அரசு படைக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே உச்சக்கட்ட மோதல் நடந்து வருகிறது. இரு தரப்பு மோதலில் அப்பாவி மக்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். கடந்த டிசம்பர் மாதம் முதல் நடந்து வரும் இந்த மோதலில் நூற்றுக்கணக்கானஅப்பாவிமக்கள்கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். மேலும் 2 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் உயிர் பிழைப்பதற்காக பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர்.



கடந்த திங்கட்கிழமை அரசு படையினர் மற்றும் கிளர்ச்சியாளர்கள் இடையிலான மோதலில் ஒரே நாளில் இருதரப்பையும் சேர்ந்த சுமார் 100 பேர் கொல்லப்பட்டனர். மேலும் அரசு படை வசம் இருந்த ஒரு முக்கிய நகரை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றினர். இந்த நிலையில், கிளர்ச்சியாளர்களுக்கு பதிலடி தரும் விதமாக அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள நகரங்களில் செவ்வாயன்று சிரிய இராணுவம் வான்தாக்குதலை நடத்தியது. கிளர்ச்சியாளர்கள் பள்ளிக்கூடங்கள் மற்றும் ஆஸ்பத்திரிகளில் பதுங்கியிருக்கலாம் என சிரியா இராணுவம் நம்புவதால் அவற்றை குறிவைத்து இந்த வான்தாக்குதல் நடத்தப்பட்டது. 10 க்கும் மேற்பட்ட பள்ளிக்கூடங்கள் மற்றும் ஒரு ஆஸ்பத்திரி மீது குண்டுகள் வீசப்பட்டன. இதில் 9 சிறுவர்கள் உள்பட அப்பாவி மக்கள் 20 பேர் பலியாகினர். மேலும் பலர் படு காயம் அடைந்தனர்.

# இந்தோனேசியாவில் கனமழை வெள்ளத்தில் சிக்கி 5 பேர் பலி



ஜகார்த்தா,பெப்.28

இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் கடந்த சில நாள்களாக இடைவிடாது கனமழை கொட்டி வருகிறது. இதனால் ஜகார்த்தா மற்றும் அதனை சுற்றியுள்ள நகரங்களில் வெள்ளம் கரைபுரண்டோடுகிறது.

ஜகார்த்தாவின் கிழக்கு பகுதிகளில் உள்ள தாழ்வான குடியிருப்புகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. இதனால் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்துள்ளனர். அவர்கள் மீட்கப்பட்டு பாதுகாப்பு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே வெள்ளத்தில் சிக்கி இதுவரை 5 பேர் உயிரிழந்துள்ளனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் 3 பேர் மாயமாகி உள்ளனர். மழை வெள்ளத்தால் மின்சாரம், தகவல் தொடர்பு மற்றும் சாலை போக்குவரத்து உள்ளிட்டவை துண்டிக்கப்பட்டிருப்பதால் மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கி உள்ளது.

# கொரோனா வைரஸுக்குத் தடுப்பூசி கண்டுபிடிக்க ஒரு வருடம் ஆகுமாம்

கொரோனாவின் தாக்குதலுக்கு தற்போது பயன்படுத்தப்பட்டுவரும் தடுப்பூசிகளை முழுமையாக நம்ப முடியாது என அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்துகருத்துத்தெரிவித்துள்ளடெக்ஸாஸ் மற்றும் நியூயோர்க்கில் இயங்கி வரும் தேசிய சுகாதார நிறுவனத்தின் ஆய்வாளர்கள், கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கான மருந்துகளை கண்டுபிடிக்க தொடர்ந்து ஆய்வுகள் நடந்து வருகின்றன, தடுப்பூசிகள் கிடைக்க ஒரு வருடத்திற்கு மேல் ஆகலாம் என்று தெரிவித்துள்ளனர்.

நியூயோர்க், டெக்ஸாஸ், ஹூஸ்டன் மற்றும் சீனாவில் தடுப்பூசிகளைக் கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர் என்று கூறிய ஹூஸ்டன் மருத்துவக் கல்லூரி பேராசிரியர் பீட்டர் ஹோடெஸ் இது ஒரு சவாலான மற்றும் அச்சுறுத்தலான பணி என்றும், கொரோனாவின் தொற்று தீவிரமாக இருப்பதாகவும், உலகளாவிய சுகாதார அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

# கொரோனாவின் வீரியம் சீனாவில் குறைகின்றது வேறு 30 நாடுகளில் கோரத்தாண்டவம் ஆரம்பம்

## ஸ்பெயினில் ஆயிரம் பேர் ஹோட்டலில் அடைத்துவைப்பு

மாட்ரிட்,பெப்.28

ஐரோப்பிய நாடுகளில் கொரோனா வேகமாக பரவி வருகிறது. ஸ்பெயின் நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக 1,000 பேர் ஹோட்டலில் அடைத்து வைக்கப்பட்டு உள்ளனர்.

சீனாவில் கடந்த டிசம்பர் மாத இறுதியில் உருவான கொரோனா வைரஸ் தொற்று நோயால் அங்கு தினந்தோறும் மக்கள் கொத்துகொத்தாக செத்து மடிகின்றனர். அங்கு இந்த கொடிய வைரசுக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 2,700 ஐ தாண்டி உள்ளது.

அதே சமயம் சீனாவில் இந்த கொடிய நோயின் வீரியம் சற்று குறைய தொடங்கி இருக்கிறது. வைரஸ் பரவலின் வேகம் முன்பை விட குறைந்து வரும் நிலையில், கிட்டதட்ட 30 ஆயிரம் பேர் குணமடைந்து வீடு திரும்பி இருக்கிறார்கள்.



ஆனால் கொரோனா வைரஸ் தற்போது, சீனாவுக்கு வெளியே கோரத்தாண்டவம் ஆடி வருகிறது. சீனாவைத் தவிர்த்து சுமார் 30 நாடுகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

இதில் ஈரான், இத்தாலி, தென்கொரியா ஆகிய 3 நாடுகளும் கொரோனாவால் பெரும் அச்சுறுத்தலை எதிர்கொண்டு வருகின்றன. அதிலும் குறிப்பாக சீனாவுக்கு அடுத்தபடியாக தென்கொரியாவில்தான் அதிக மக்களுக்கு கொரோனா பாதிப்பு உள்ளது.

அங்கு இந்த கொடிய நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11 ஆக உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம் ஒரே நாளில் 115 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இதன் மூலம் நோய் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,300 ஐ நெருங்கி உள்ளது. இவர்களில் அமெரிக்க ராணுவவீரர் ஒருவரும் அடங்குவார். தேகு நகர் அருகே உள்ள இராணுவதளத்தில் இருக்கும் 23 வயதான அமெரிக்க வீரருக்கு நோய் தொற்று இருப்பது கண்டறியப்பட்டு உள்ளது.

தென்கொரியாவை தொடர்ந்து, ஐரோப்பிய நாடான இத்தாலியிலும் கொரோனா வைரஸ் தனது கைவரிசையை காட்டி வருகிறது. அங்கு கொரோனாவுக்கு 11 பேர் பலியான நிலையில், 300 க்கும் மேற்பட்டோருக்கு கொரோனா பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனிடையே இத்தாலியில் இருந்து மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு கொரோனா வைரஸ் பரவ தொடங்கி இருக்கிறது.

சிசிலி தீவில் ஒரு பெண், குரோஷியாவில் ஒரு ஆண், ஆஸ்திரியாவில் தம்பதியர் இருவர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், சுவிட்சர்லாந்திலும் ஒருவரை கொரோனா தாக்கி உள்ளது.

இதையடுத்து, வைரஸ் பரவலை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஐரோப்பிய நாடுகள் தீவிரப்படுத்தியுள்ளன. அதே சமயம் இத்தாலியுடனான எல்லைகளை மூடப்போவதில்லை என மற்ற ஐரோப்பிய நாடுகள் உறுதி அளித்துள்ளன.

இதற்கிடையில், ஸ்பெயின் நாட்டின் டெனரீப் மாகாணம் கேனோரி தீவில் உள்ள ஒரு நட்சத்திர ஓட்டலில் தங்கியிருக்கும் இத்தாலியை சேர்ந்த டாக்டர் மற்றும் அவரது மனைவிக்கு கொரோனா பாதிப்பு இருப்பது தெரியவந்தது.

இந்த ஓட்டலில் இத்தாலி மற்றும் இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த சுற்றுலா பயணிகள் 1,000 க்கும் மேற்பட்டோர் தங்கியுள்ளனர். அவர்கள் அனைவரையும் ஹோட்டலை விட்டு வெளியேற விடாமல் ஓட்டலுக்குள்ளேயே அடைத்து வைத்துள்ளனர்.

இதையடுத்து, அந்த ஹோட்டல் தனிமைப் படுத்தப்பட்டு ஹோட்டலை சுற்றிலும் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.ஹோட் டலில் இருக்கும் விருந்தினர்களுக்கு தொடர்ந்து மருத்துவ பரிசோதனை நடந்து வருகிறது.

இதில் ஹோட்டலில் இருக்கும் மேலும் 2 இத்தாலிய சுற்றுலாப் பயணிகளுக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டு உள்ளது. இதன் மூலம் கொரோனாவால் பாதிக்கப்பட்ட ஹோட்டல் விருந்தினர்களின் எண்ணிக்கை 4 ஆக உயர்ந்துள்ளது.

ஹோட்டல் விருந்தினர்கள் அனைவரும் அடுத்த 14 நாள்களுக்கு தனிமைப்படுத்தி வைக்கப்படுவார்கள் என ஸ்பெயின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# வெள்ளிதோறும் சைவக்கதிர்



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
(மெல்பேண், ஆஸ்திரேலியா)
முன்னாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்

# இந்துமதம் ஒரு வாழும் நெறி!

வையத்துள் வாழ்வாங்கு வாழும் வகையினை யாவருக்கும் காட்டுகின்ற நெறிமுறைகள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டதாக இந்துமதம் விளங்குகின்றது. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என எண்ணுபவர்களையும், இப்படித்தான் வாழவேண்டும் என அன்புடனும், அரவணைப்புடனும் அணுகி அவர்கள் அனைவரும் வாழ்வதற்குத் தேவையான வற்றைக் காட்டி நிற்பதால் இந்துமதம் என்றும் வாழும் நெறியாக இருந்து வருகிறது எனலாம். நெகிழ்ச்சியும், சகிப்புத்தன்மையும், சுதந்திரமும், கொண்டதாக இந்துமதம் திகழ்கின்றமையாலும் அதனை ஒரு வாழும் நெறி என்று குறிப்பிடலாம்.

உலகில் பல மதங்கள் காணப்படுகின்றன. அவற்றுக்கெல்லாம் தொடங்கியவர்கள், தொடங்கியகாலம் என ஒரு வரையறை காணப்படுகிறது. ஆனால் இந்துமதத்தை யார் தொடக்கினார்கள் ? எப்பொழுது தொடங்கப்பட்டது ? – என்பதற்கு எந்தவித ஆதாரங்களும் காணப்படவில்லை. ஆதியும் அந்தமும் அற்ற மதமாக இந்துமதம் விளங்குவதைக் காண்கின்றோம். இதனால்ததான் இந்துமதத்தை சனாதன் தர்மம் என்று குறிப்பிட்டனர். ‘சனாதன’ என்றால் நிலையானது என்று பொருளாகும். அதாவது நித்தியமானது அழிவில்லாதது என்பதாகும். இதனாலும் இதனை வாழும் நெறி என்று அழைக்கலாம்.

குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்று கூறப்பட்டு வந்ததை நாமனைவரும் கேட்டிருக்கின்றோம். அதற்கு எடுத்துக்காட்டாக ’மனமொரு குரங்கு’ என்று ஒரு உதாரணம்காட்டப்படுவது நோக்கத்தக்கது.

விலங்காக இருந்த மனித சிந்தனை, செயற்பாடு யாவும் சற்று மாறுதலடைந்து சிந்திக்கதக்க மனிதனாக மாற்றம் அடைந்ததற்குக் காரணம் மனித வாழ்விலேற்பட்ட படிப்படியான மாற்றங்களேயாகும்.

மாற்றமடைந்த மனிதனிடம் விலங்கின் தன்மைகள் முழுமையாக விட்டு நீங்கவில்லை என்பதைத் தக்க சமயத்தில் காணக்கூடியதாக இருக்கிறது. உணர்ச்சி மேலிட்டு நிற்கின்ற பொழுது மனிதனால் செய்யப்படுகின்ற ஆக்ரோஷமான நடவடிக்கைகள், இன்னும் மனிதனிடமிருந்து மிருக இயல்புகள் மறையவில்லை என்பதையே காட்டி நிற்கின்றன எனலாம்.

அந்த இயல்புகளை மாற்றி மனிதனை மனிதனாகவும், அந்த மனிதனைப் புனிதனாகவும் மாற்றும் தன்மைகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டதாக இந்துமதம் திகழ்வதால் அது ஒரு வாழும் நெறியாக விளங்குகிறது எனலாம்.

மதங்களும் அவைவகுத்த கடவுள் கோட்பாடுகளும் மனிதனைப் புனிதம் மிக்கவனாக மாற்றுவதற்கே அன்றி, அவனை அடக்கி, ஒடுக்கி வைப்பதற்கு அல்ல. மதங்களும், அவற்றின் கொள்கைகளும் மனிதன் தன் வாழ்வில் முன்னேற்றம் கொள்ளவும் அவனுள் தூய்மையை ஏற்படுத்தவுமே அமைந்தன. ஆனால், சில மதங்கள், மனித சமுதாயத்தை அடக்கி, ஒடுக்கி வைக்க முனைகின்றன. சர்வாதிகாரப் போக்குடையயனவாகவும் காணப்படுகின்றன. செய் அல்லது செத்துமடி என்னும் இராணுவத் தோறணை கொண்டனவாகவும் இருகின்றன. சமயமாக இல்லாமல் சர்வாதிகாரம் கொண்டனவாக மாற முற்படுகின்றன.

இவற்றுக்கு மத்தியில் இந்துமதமோ மாறுபட்டு, வேறுபட்டு நிற்கிறது. பூரண சுதந்திரம் கொண்டதாக இந்துமதம் விளங்குகின்றது. இந்து மதத்தவர்கள் அம்மதத்தை விட்டுச் சென்றாலும் சரி, வேறு மதத்தவர்கள் இந்துமதத்தில் இணைந்தாலும் சரி அதை யிட்டு இந்துமதம் கண்டு கொள்ளுவதேயில்லை.

கடலினுள் பல இடங்களிலிருந்து வரும் ஆறுகள் கலக்கின்றன. அந்த ஆறுகள் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, கடல் ஒரு போதும் கவலைப்படுவதே இல்லை. வருகின்ற ஆறுகளை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளுவதைப் போன்று பரந்து விரிந்த கடலாக விளங்கும் இந்துமதமும் வருவோரையெல்லாம் மகிழ்வோடும் பரிவோடும் அணைத்துக் கொள்ளும் அன்பும், சகிப்புத்தன்மையும் கொண்டிருப்பதனால்தான் அது என்றும் ஒரு வாழும் நெறியாக இருக்கின்றது.

வாழ்க்கையை எப்படி வாழலாம் என்பதற்கு இந்துமதம் பல படிமுறைகளைக் காட்டுகின்றது. பிரமச்சாரியாக, கிரகஸ்த்தனாக, வானப்பிரசஸ்த்தனாக, சன்னியாசியாக வாழலாம் என்று காட்டி நிற்கிறது. நடைமுறைக்கு இது ஏற்கக்கூடயது எனப் பெரியவர்கள் இன்று கருதுகின்றனர். இல்லறவாழ்வில் ஈடுபட முன்பு ஒருவன் மாணவனாக இருந்து கல்வி கற்க வேண்டும். மாணவப் பருவம் பிரமச்சாரியத்துக்கு உரியது என்பதை எவரும் மறுக்கமுடியாதல்லவா?

கற்றுத் தேர்ந்த பின் நல்ல மனவியாகத் தேர்ந்தெடுத்து வாழுதல் கிரகஸ்தம் ஆகிறது. கற்று முடித்த பின் இல்லறத்தில் ஈடுபடும் பொழுது வாழ்வு பயனுடையதாக அமையும் அல்லவா? பொருள் ஈட்டவும், தானதர்மம் செய்யவும், மக்கட் செல்வங்கள், உற்றார் உறவினருடன் இசைந்து வாழவும் இல்லறமாகிய நல்லறம் பொருத்தமானதாக இருக்கு மல்லவா?

இல்லற இன்பத்தில் திளைத்து, பின் வாழ்வின் நெளிவு சுழிவுகளை நன்றாக உய்த்து உணர்ந்த பின், மனம் துறவையே நாடுவது இயல்பான ஒன்றே. இதுவே உண்மையான முதிர்ச்சியும் கூட. எனவே இல்லறமாம் நல்லறத்தின் நிறைவில் ஏற்படுவது துறவறம் ஆகிறது.

மனித வாழ்வை மிகவும் நுட்பமாக மதிப்பீடு செய்து, அதற்கான பருவங்களையும் அடையாளம் கண்டு, அதன் படி வாழும் நிலைகளில் என்னென்ன கடமைகளை எல்லாம் ஆற்றவேண்டும் மென்பதையும் வகுத்து வைத்து வாழ்க்கையை வாழ விழைபவர்களுக்கு காட்டி நிற்கிறது இந்துமதம். இதனால்தான் இது வாழும் நெறி எனப் போற்றப்படுகின்றது,

இல்லற வாழ்வை இந்துமதம் பெரிதும் போற்றுகின்றது. இல்லற வாழ்வில் பெண்ணின் இடம் மிகவும் உன்னதமானதாகும். பெண்ணைப் போற்றாத எந்த ஓர்அமைப்பும் உயிரோட்டம் உள்ளதாக இருக்க மாட்டாது. இதனை நன்குணர்ந்த காரணத்தால், பெண்மைக்கு உயரிய இடத்தை இந்துமதம் வழங்கியிருக்கிறது எனலாம்.

பெண்மையென்றால் மென்மையும், பொறுமையும், அன்பும், அரவணைப்பும், பாசமும், நேசமும் மிக்கதென்பதே கருத்தாகும். இவையனைத்தையும் கொண்டதாக இறைத்தன்மையும் இருக்கின்றது. இதனால்தான் பெற்ற தாயை தெய்வமாகப் போற்றும் நிலையை இந்து மதம் தன்னுள் கொண்டிருக்கின்றது.

பெண்மையைத் தெய்வமாக்கிய பெருமையை இந்துமதம் எடுத்துக் கொள்கிறது. கல்வி செல்வம், வீரம், இம்மூன்றும் எந்த மொழி, எந்த நாடு, எந்த இனம், என்று இல்லாமல் யாவருக்கும் தேவையானதே. அது மட்டுமல்ல இவை மூன்றும் இல்லாவிட்டால் – முழுமை என்பதற்கே அர்த்தம் இல்லாது போய்விடும். அடிப்படையான, அத்தியாவசியமான இம் மூன்றையும் தருகின்ற கடவுள் சக்தியாக சரஸ்வதி, லக்ஷமி, துர்க்கை எனப் பெண்மையையே உருவகப்படுத்திக் காட்டிய இந்துமதம் உண்மையிலேயே சிறந்த ஒரு வாழும் நெறிதான் என்பதை மறுக்கமுடியாது.

கல்வி, செல்வம், வீரம், இவற்றை நினைத்தவுடன் பெற்றுவிட முடியாது. இவற்றைப் பெறுவதற்கு மிகுந்த பொறுமை வேண்டும். பல சோதனைகளை வேதனைகளைத் தாங்க வேண்டும். சில தியாகங்களைச் செய்ய வேண்டும். தன்னம்பிக்கை நிறையவே வேண்டும். இவை யாவும் பெண்களிடம் நிறைந்து காணப்படுவதால்தான் பெண்மை, தெய்வீகம் ஆக்கப்பட்டது.

இந்துமதம் இல்லறத்தைப் போற்றுகின்ற போதும், துறவறத்தையும் ஒதுக்கிவிட வில்லை. இல்லற இன்பம் நிறைவு பெறும் நிலை வந்ததும், துறவறம் என்னும் ஒரு நிலையும் இருக்கிறது என்று இந்துமதம் காட்டுகிறது. இல்லற வாழ்வில் ஈடுபட விருப்பம் இல்லாவிட்டால் துறவறத்தை தேர்ந்தெடுத்து அதன்படியும் நடக்கலாம் என்றும் வழிகாட்டி நிற்கிறது. துறவறம்தான் கட்டாயம் என்றோ – இல்லறந்தான் கட்டாயமென்றோ வற்புறுத்தவில்லை. இரண்டையும் காட்டி, விரும்பியதை வாழ்க்கை ஆக்கிக் கொள் என்னும் சுதந்திரத்தை இந்துமதம் வழங்கி நிற்கிறது.

உயிர்வாழ்வதற்கு உணவு இன்றியமையாதது. ‘உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே’ என்பது இதனை வலியுறுத்தி நிற்கின்றது. இந்துமதம் பலவிதமான தர்மங்களைக் காட்டி நிற்கிறது. அவற்றில் அன்றும் இன்றும் என்றுமே தலையான தர்மம் அன்னம் இடுதலேயாகும். எந்தத. தானத்தைச் செய்தாலும் அதனைப் பெற்றுக் கொண்டவர்கள் திருப்தியை வெளிப்படுத்துவதில்லை. ஆனால் அன்னத்தைப் பெற்று தனது பசியினைப் போக்கியவர்கள் மட்டுமே, உலகில் மனமாரத் திருப்தி அடைந்து மகிழ்ச்சியுடன் போதும் என்று வாய்விட்டுச்சொல்லிநிற்பார்கள். இதனால்தான் அன்னதானத்தைச் செய்வது மேலானது என இந்து மதம் சொல்லுகிறது. இது ஒரு சிறந்த வாழும் நெறி அல்லவா ?

குடும்ப உறவு வாழ்க்கையில் மிகவும் முக்கியமானது. தாய் தந்தை, மகன் ,மகள், மாமா மாமி, மைத்துனன் எனக் குடும்ப உறுப்பினர்கள் வாழ்க்கையில் பெரும்பங்கு வகிக்கின்றனர். இப்படியான உறவு நிலைகளை இந்துமதம் மிகவும் நுட்பமாகக் கடவுள் கொள்கையுடன் இணைத்துவிட்டது.

கடவுளை வழிபடுகின்ற பக்தன் கடவுளை – தாயாக, தந்தையாக, நண்பனாக, காதலனாக, காதலியாக, குழந்தையாக, நினைந்து வழிபடுகின்ற பொழுது அவனது மனம் இறை அருளில் ஒன்றி விடுகிறது.

சிவன் தந்தையாகவும், பார்வதி தாயாகவும், விநாயகரும் முருகனும் அவர்களது பிள்ளைகளாகவும், பிரம்ம, விஷ்ணு , இந்திரன் உறவினராயும், தேவர்கள் ஏனைய உறவுகளாவும் நண்பர்களாகவும் இந்துமதம் கடவுளையே குடும்பத்துக்குள் கொண்டுவந்துவிட்டது. இந்தச் செயற்பாடானது பார்ப்பதற்கு வேடிக்கையாகவும் விநோதமானதாயும் இருக்கும். ஆனால் இதனை வேடிக்கை என்று எடுத்துக் கொள்ளல் கூடாது.

ஆண்டவன் என்பவன் யாராலும் அணுகமுடியாதவன் அல்லன். அன்பும், பாசமும், அரவணைப்பும் கொண்ட குடும்ப உறுப்பினன் போன்றவனே ஆண்டவன். அவனை அடைய, அவன் அருளைப் பெற, அன்பும், பொறுமையும், தயாளமும், தர்மமும், சகிப்புத்தன்மையும், பாசமும், உள்ளத்தில் ஏற்படுமானால் நிச்சயமாக ஆண்டவனைக் காணமுடியும் என்னும் உயர்ந்த தத்துவத்தை யாவருக்கும் விளங்கப்பண்ணுவதற்கே இந்துமதம் குடும்ப உறவை இறைவனுடன் இணைத்தது என்பது மிகவும் கவனிக்கப் படவேண்டிய வியமாகும்.

நாளாந்தம் நாம் கைக்கொள்ளும் நடைமுறைகள் அத்தனையிலும் இந்துமதம் தன்னை உள்நுழைத்துக் கொண்டுள்ளது. உண்பது தொடக்கம் உறங்குவது வரை இந்துமத நெறிகள் பரவிக் கிடப்பதைக் காணலாம்.

இந்து மதத்தில் மிகவும் முக்கியமானது ஆசாரமாகும். ஆசாரம் என்றால் என்ன? ஆசாரம் என்றால் சுகாதாரம் என்பதுதான் கருத்து. உடலையும் சுத்தமாக வைத்திரு. உள்ளத்தையும் சுத்தமாக வைத்திரு. இதுதான் இந்துமதத்தின் அடிப்படை வாழும் நெறி எனலாம். இதற்குப் பலவிதிமுறைகளை இந்துமதம் வைத்திருக்கிறது.

(11 ஆம் பக்கம் பார்க்க)

# இரசாயனப் பொருள்களுடன் ஓமந்தையில் ஒருவர் கைது

கொழும்பு, பெப். 28

ஓமந்தை இராணுவக் நிலையம் அருகே கடற்படை மற்றும் பொலிஸார் இணைந்து நடத்திய சோதனையின் போது கிளைபோசேட் அடங்கிய இரசாயனப்பொருள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கடற்படை மற்றும் செட்டிக்குளம் பொலிஸ் சிறப்பு பணிக்குழு இணைந்து ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடி அருகே நடந்திய சோதனை நடவடிக்கையின் போது சந்தேகத்திற்கிடமான ஒரு வான் சோதனையிடப்பட்டது. அதிலிருந்து சட்டவிரோத கிளைபோசேட் கொண்ட 1897 இரசாயன பொருள் பைக்கெற்றுகளை (189 கிலோ மற்றும் 700 கிராம்) மீட்கப்பட்டன.

இந்த இரசாயனப் பொருள் பைக்கெற்றுகளை விற்பனைக்குக் கொண்டு சென்ற ஒரு சந்தேகநபரும் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட நபர் வெயங்கொட பகுதியில் வசிக்கின்ற 49 வயதானவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இந்த நபர், வான் மற்றும் கிளைபோசேட் அடங்கிய இரசாயனப்பொருள்களுடன் விசாரணைகளுக்காக ஓமந்தைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

# அமெரிக்காவைப் போன்று கனடாவும் இலங்கை மீது பயணத்தடை போடுமா?

## அந்நாட்டு நாடாளுமன்றத்தில் கேள்வி

மொன்றியல், பெப். 28

மக்கன்சி சட்டத்தைப் பயன்படுத்தி அமெரிக்காவைத் தொடர்ந்து கனடாவும் போர்க்குற்றங்கள் புரிந்தவர்கள் மீதான பயணத் தடையை விதிக்குமா என்று கனேடிய நாடாளுமன்றத்தில், பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிடம் கன்சர்வேடிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கார்னட் ஜெனூயிஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் அனைத்துக் கட்சிகளும் இணைந்து ஆதரவளித்து, நிறைவேற்றிய தனிநபர் பிரேரணையான இலங்கையில் நடந்த இனப்படுகொலை குறித்து ஐ.நா விசாரிக்க வேண்டும் என நிறைவேற்றி தீர்மானம் குறித்து லிபரல் அரசு மேற்கொண்டு என்ன செய்துள்ளது? அத்துடன்,மக்கன்சி சட்டத்தைப் பயன்படுத்தி அமெரிக்காவைத் தொடர்ந்து கனடாவும் போர் குற்றங்கள் புரிந்தவர்கள் மீதான பயணத்தடையை விதிக்குமா? எனவும் கேள்வி எழுப்பினார்.

அதற்கு கனேடியப் பிரதமர், ஈரான் குறித்து தனது பதிலை அளித்து இலங்கை விடயத்தில் இருந்து நழுவிக்கொண்டார். ஈழத்தமிழர் ஒருவர் கனேடிய நாடாளுமன்றில், ஆளும் கட்சி உறுப்பினராக இருக்கின்ற நிலையில், அந்நாட்டுப் பிரதமரின் இந்தச் செயல் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது.

மியன்மரில் இன ஒடுக்கு முறைக்கு உள்ளான ரோஹிங்கியா முஸ்லிம்களுக்கு கொடுத்த முக்கியத்துவத்தை, கனடா அரசு இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் காட்டவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கை குறித்தும், ஈழத்தமிழர்கள் குறித்தும், 24 மணி நேரத்துக்கு முன்னதாக எழுதிக் கொடுக்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு கனடா பிரதமர் இவ்வாறு பதிலளிக்காமல் நழுவிச் சென்றிருக்கின்றமை கனடா வாழ் ஈழத்தமிழர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

# தமிழர்களினதும், புலிகளினதும் சித்தாந்தங்கள் வெவ்வேறல்ல!

## கூறுகின்றார் சபா குகதாஸ்



யாழ்ப்பாணம், பெப். 28

தமிழ் மக்களின் சித்தாந்தத்தையே தமிழீழ விடுதலைப் புலிகள், முன்னெடுத்தார்களே தவிர புலிகளின் சித்தாந்தம் என்று எதுவும் முன்வைக்கப்படவில்லை என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சித்தாந்ததையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்னெடுத்து வருகின்றனர் எனவும் அதில் தமிழ் மக்களுக்கு எவ்வித விருப்பமும் இல்லை என்றும் பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ன தெரிவித்துள்ள கருத்துக்குக் கண்டனம் தெரிவித்து அவர் மேற்படி கருத்தை வெளியிட்டார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில், கருத்து வெளியிட்ட அவர், சாம்பியா நாட்டு இராணுவத்தளபதிக்கும் இலங்கை பாதுகாப்புச் செயலாளருக்கும் இடையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சில் சந்திப்பு இடம்பெற்ற சந்திப்பைச் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சந்திப்பில் பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புலிகளின் சித் தாந்தத்தை நிறைவேற்றும் நோக் கிலேயே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்றார்.

ஆனால் உண்மையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதில் எவ்வித விருப்பமும் இல்லைஎன்றகருத்தை வெளியிட்டுள்ளார்.

அவரின் இந்தக் கருத்து வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இது தமிழரின் அடிப்படைச் சித்தாந்த உரிமைகளை கொச்சைப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் சித்தாந்தத்தைத் தான் முன்னெடுத்தார்களே தவிர புலிகளின் சித்தாந்தம் என்று எதுவும் முன்வைக்கப்படவில்லை.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட முன்னர் அகிம்சைப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். அது கொச்சப்படுத்தப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டமையினால் ஆயுதப் போராட்டம் தொடங்கியது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகள் தொடர்பாக பொதுமக்கள் வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்.

சூடான், பிரித்தானியா போன்ற நாடுகளில் அவ்வாறு நடைபெற்று ஒவ்வொரு அலகுகள் பிரிந்துள்ளன. போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்களில் முக்கியமான ஒருவராக இருக்கும் தற்போதைய பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ன தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகளை கொச்சப்படுத்தும் வகையில் கருத்துக்கள் வெளியிடுவதை நிறுத்த வேண்டும்.

2001ஆம் ஆண்டில் இருந்து தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கே ஆதரவை வழங்கி வருகின்றனர். தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகளைக் கொள்கையாகக் கொண்டு பயணிக்கும் கூட்டமைப்பினர் அதனைப் பெற்றுக்கொள்ளும் பயணத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

அதற்காக முள்ளிவாய்க்காலில் போரை முன்னின்று நடத்திய முக்கிய படைத் தளபதியாக இருந்த கமால் குணரட்ன தமிழர்களின் அபிலாசைகளை கொச்சப்படுத்துவது கண்டனத்துக்குரியதாகும் – என்றார். (ஐ)

# முடிந்தது உண்ணாவிரதம்!

மன்னார், பெப். 28

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்சியாக பதிவு செய்ய கோரியும், பல்வேறு கோரிக்கை களை முன்வைத்தும் மன்னாரை சேர்ந்த ஒருவர் கடந்த சனிக்கிழமை காலை ஆரம்பித்த உண்ணாவிரத போராட்டம் நேற்று முன் தினம் மாலை 6.45 மணியளவில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிவு செய்யக் கோரியும், பல்வேறு கோரிக் கைகளை முன்வைத்தும் மன்னாரைச் சேர்ந்த 39 வயதான இரத்தினம் ஞானசேகரம் யூலியஸ் என்பவர் கடந்த சனிக்கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்து வந்தார்.

இந்தப் போராட்டம் ஐந்தாவது நாளாகவும் நேற்று முன் தினம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. போராட்டத்தை கைவிடுமாறு கோரி பலரும் அவருடன் பேச்சு மேற்கொண்டிருந்தனர்.

அவரின் உடல் நிலையைக் கருத்தில் கொண்டு மன்னார் பிரஜைகள் குழுவினரும் பேச்சில் ஈடுபட்டனர். இதன்போது, உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட்டு இந்த முயற்சியை வேறு வடிவத்தில் முன்னெடுக்குமாறு ஆலோசனை வழங்கினர்.



இதனையடுத்து போராட்டம் நேற்று முன் தினம் மாலை 6.45 மணியளவில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.ஞானப் பிரகாசம் அடிகளார்,பிரஜைகள் குழு பிரதி நிதிகள், மன்னார் மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், மூர்வீதி ஜும்மா பள்ளி மௌலவி எம்.அசீம், மன்னார் நகர முதல்வர் ஞானப் பிரகாசம் அன்ரனி டேவிட்சன், மன்னார் நகர சபை உறுப்பினர்களான எஸ்.ஆர்.குமரேஸ், ஜோசப் தர்மன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு ஆகாரத்தை வழங்கி உண்ணாவிரதத்தை முடிவுக்கு கொண்டு வந்தனர்.



காலைக்கதிர்
Kalaikathir





# ரபோவா ஓய்வு!

ரென்னிஸ் உலகின் பேரழகி என அனைவராலும் புகழப்பட்ட ரஷ்யாவின் முன்னணி வீராங்கனையான மரியா ரபோவா, ஏமாற்றத்துடன் சர்வதேச ரென்னிஸ் அரங்கிலிருந்து விடைபெற்றுள்ளார்.

ரென்னிஸ் உலகில் 5 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற மகத்தான சாதனை நாயகியாகப் பார்க்கப்படும் மரியா ரபோவா, தடைக்குப் பின்னர் எவ்வித சம்பியன் கிண்ணத்துக்கும் முத்தமிட முடியாத ஏக்கத்துடன் ரென்னிஸ் விளையாட்டுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

32 வயதான மரியா ரபோவா ஓய்வு குறித்து கூறுகையில், 'நான் டென்னிஸுக்கு குட்பை சொல்கிறேன். 5 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுவிட்டேன். என்னுடைய வெற்றிக்கு முக்கியக் காரணம் என்னவென்றால், நான் ஒருபோதும் பின்னோக்கிப் பார்த்தது இல்லை.

முன்னோக்கிப் பார்த்ததும் இல்லை. நான் தொடர்ந்து முயற்சித்துக்கொண்டே இருந்தால், அது நிச்சயம் என்னை நம்பமுடியாத இடத்துக்கு நகர்த்தும் என்று நம்பினேன். நான் என்னுடைய வாழ்க்கையை டென்னிஸ் விளையாட்டுக்காக அர்ப்பணித்தேன். ரென்னிஸ் தான் எனக்கு வாழ்க்கையைக் கொடுத்தது.

ஆனால், நான் ஓய்வு பெற்றபின், ரென்னிஸ் விளையாட்டை ஒவ்வொரு நாளும் இழப்பேன். பயிற்சியை இழப்பேன். அன்றாட வாழ்க்கையில் ரென்னிஸை இழப்பேன். சூரிய உதயத்திலிருந்து மறைவு வரை என்னுடைய பயிற்சிக்காக என்னுடைய காலில் பாதணியை அணிய முடியாது. என்னுடைய பயிற்சியாளர்களை, எனது அணியை அனைவரையும் இழக்கிறேன்

நான் இப்போது திரும்பிப் பார்க்கிறேன். நான் ரென்னிஸில் மிகப்பெரிய மலையைக் கடந்து வந்திருக்கிறேன். என்னுடைய பாதை முழுவதும் பள்ளத்தாக்குகளும், வேலிகளும் நிறைந்தவை. ஆனால் உச்சியிலிருந்து பார்த்தால் எனது பாதை நம்பமுடியாதவை.

கடந்த 28 ஆண்டுகளாக, ரென்னிஸுடன் இணைந்து ரசிகர்களையும் ஒரு குடும்பமாக கருதினேன். சிறு வயதிலிருந்து பயிற்சி பெற்ற ரென்னிஸ் களத்தை விட்டு எப்படி வெளியேறுவது. சொல்ல முடியாத கண்ணீரை, வெளிப்படுத்த முடியாத மகிழ்ச்சியை தந்த டென்னிஸ் விளையாட்டிலிருந்து எப்படி விடைபெறுவது. என்னை மன்னித்து விடுங்கள், சர்வதேச ரென்னிஸ் அரங்கிலிருந்து ஓய்வு பெறுகிறேன்' எனக் கூறினார்.

கடந்த 1987ஆம் ஆண்டு ஏப்ரல் 19ஆம் திகதி ரஷ்யாவின் சைபீரியாவில் பிறந்த மரியா ரபோவா, கடந்த 1994ஆம் ஆண்டு 700 அமெரிக்க டொலர்களுடன் 7 வயதில், தந்தையுடன் அமெரிக்காவுக்குச் சென்று குடியேறினார்.

அமெரிக்காவில் நிரந்தரக் குடியுரிமை பெற்று வசித்து வந்தபோதும், ரஷ்ய வீராங்கனையாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார் மரியா ரபோவா.

2004ஆம் ஆண்டு, 17 வயதில் விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாமில் பங்கேற்ற ரபோவா, அப்போது உச்சத்தில் இருந்த செரீனா வில்லியம்ஸை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்று, உலகைத் தன் பக்கம் திரும்பிப்பார்க்கவைத்தார். ரபோவா வென்ற முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டமே இதுதான்.

முதல் கிராண்ட்ஸ்லாமிலேயே ஜாம்பவானை வீழ்த்தி வெற்றி பெற்றதாலோ என்னவோ, அதுவரை ரபோவாவை சாதாரண வீராங்கனையாகப் பார்த்து வந்த இந்த உலகம், அதன்பின் அவரை ஜாம்பவானாக பார்க்கத் தொடங்கியது.

இதன்பிறகு ரென்னிஸ் களத்தில் பம்பரமாய் சுழன்று சம்பியன் பட்டங்களை குவிக்க தொடங்கிய ரபோவா, அடுத்தடுத்து, கிராண்ட்ஸ்லாம் அரங்கில் நான்கு முறை சம்பியன் பட்டங்களை வென்றுள்ளார்.

ஆஸ்திரேலியா பகிரங்க ரென்னிஸில் 2008ஆம் ஆண்டும், பிரான்ஸ் பகிரங்க ரென்னிஸ்ஸில் 2012ஆம் மற்றும் 2014ஆம் ஆண்டும், அமெரிக்க பகிரங்க ரென்னிஸில் 2006ஆம் ஆண்டும் சம்பியன் பட்டத்தை வென்று அசத்தினார்.

டபிள்யு.டி.ஏ ரென்னிஸ் உலகில் தனது 18ஆவது வயதிலேயே உலகின் மிகச்சிறந்த வீராங்கனை எனும் பெயரெடுத்து தரவரிசையில் ரபோவா முதலிடத்தைப் பெற்றார். இதுவரை 36 டபிள்யு.டி.ஏ. சம்பியன் பட்டங்களையும், 4 ஐ.டி.எப். சம்பியன் பட்டங்களையும் ரபோவா வென்றுள்ளார்.

கேரியர் கிராண்ட்ஸ்லாம் அதாவது, 4 தொடரிலும் சம்பியன் பட்டம் கைப்பற்றிய ஒரே ரஷ்ய நட்சத்திரம் மரியா ஆவார்.

இரட்டையர் பிரிவில் 3 சம்பியன் பட்டங்கள் கைப்பற்றியுள்ளார். 2012ஆம் ஆண்டு நடந்த லண்டன் ஒலிம்பிக்கில் வெள்ளி பதக்கம் வென்றார்.

போர்ப்ஸ் பத்திரிகை சார்பில் வெளியிடப்படும், அதிக வருமானம் பெறும் விளையாட்டு நட்சத்திரம் பட்டியலில் பல முறை முதல் இடம் பெற்றவர் ஆவார்.

2007ஆம் ஆண்டு முதன்முதலில் தோள்பட்டை வலியால் ரபோவா அவதிப்பட்டார். இருப்பினும் காயத்திலிருந்து மீண்டுவந்து 2008ஆம் ஆண்டில் ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸில் சம்பியன் பட்டம் வென்றார். அதன்பின் 2014ஆம் ஆண்டு பிரான்ஸ் பகிரங்க ரென்னிஸ் தொடரிலும் காயத்தால் ரபோவா அவதிப்பட்டார்.

அத்தோடு, கடந்த 2019ஆம் ஆண்டு மரியா ரபோவா, கடந்த பெப்ரவரி மாதம் வலது கை தோள்பட்டையில் அறுவைச் சிகிச்சை மேற்கொண்டார்.

உலகெங்கிலும் உள்ள பலகோடி இரசிகர்களின் கவனத்தை ஈர்த்த மரியா, கடந்த 2016ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரின்போது ஊக்கமருந்து பயன்படுத்தியதாக 15 மாதங்கள் தடையைப் பெற்றார். 'மெலடோனியம்' எனும் மருந்தை அவர் பயன்படுத்தினார் எனக் குற்றச்சாட்டு எழுந்தது.

அந்த ஆண்டு ஜனவரி மாதம்தான் அந்த மருந்து தடைசெய்யப்பட்டது. ஆனால், ஆய்வு நடந்தது ஏரலில். அவரோ, தான் அந்த மருந்தை கடந்த 10 ஆண்டுகளாகத் தனது மருத்துவத்துக்காகப் பயன்படுத்துவதாகவும், இதைத் தடை செய்தது தனக்குத் தெரியாது எனவும் தெரிவித்தார். ஆனாலும் தடை நீக்கப்படவில்லை.

தடைக் காலத்தை ஏகபோகமாக அனுபவித்த பின், மீண்டும் டென்னிஸ் களத்துக்கு திரும்பிய போதும், தடையால் கிடைத்த 15 மாத இடைவெளி, அவரது ஆட்டத்தை பெரிதும் பாதித்தது. பல ரென்னிஸ் தொடர்களில், ஆரம்ப சுற்றுகளி லேயே வெளியேறியமை உலகம் முழுவதும் இருக்கும் அவரது இரசிகர்களுக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது.

அத்துடன், சமீபத்தில் நடந்த ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் தொடரில் முதல் சுற்றுடன் வெளியேறி தரவரிசையில், 373ஆவது இடத்திற்கு தள்ளப்பட்ட முன்னாள் முதல் நிலை வீராங்கனையான மரியா ரபோவா, தடைக்கு பிறகு மீண்டும் ரென்னிஸ் விளையாட வந்தபின், தற்போது மூன்று ஆண்டுகளுக்குப் பின் ஓய்வு பெற்றுள்ளார்.

# சொந்த மண்ணில் மண்டியிட்டது தென்னாபிரிக்கா!




தென்னாபிரிக்கா அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான ரி – 20 போட்டியில், ஆஸ்திரேலியா அணி 97 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி – 20 தொடரை 2 – 1 என்ற கணக்கில் ஆஸ்ரேலியா அணி கைப்பற்றியது.

கேப்டவுண் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய ஆஸ்ரேலியா அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 193 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, டேவிட் வோர்னர் 57 ஓட்டங்களையும், ஆரோன் பின்ஞ் 55 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

தென்னாபிரிக்கா அணியின் பந்துவீச்சில் கார்கிஸோ ரபாடா, என்ரிச் நோர்ஜே, லுங்கி நங்கிடி, டுவைன் பிரிடோரியஸ் மற்றும் டப்ரைஸ் சம்ஸி ஆகியோர் தலா 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 194 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணி, 15.3 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழுந்து 96 ஓட்டங்களுக்குச் சுருண்டது. இதனால், ஆஸ்திரேலியா அணி 97 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இதன்போது தென்னாபிரிக்கா அணி சார்பில், ராஸ்ஸி வெண்டர் டஸன் 24 ஓட்டங்களையும், ஹெய்ன்ரிச் கிளாசென் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ஆஸ்திரேலியா அணியின் பந்துவீச்சில், மிட்செல் ஸ்டாக் மற்றும் அஸ்டன் அகர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், ஆடம் செம்பா 2 விக்கெட்டுகளையும், பெட் கம்மின்ஸ் மற்றும் மிட்செல் மார்ஷ் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 2.3 ஓவர்கள் பந்துவீசி இரண்டு உதிரிகள் அடங்கலாக 3 விக்கெட்டுகளைச் சாய்த்த மிட்செல் ஸ்டாக் தெரிவு செய்யப்பட்டார்.

இத்தொடரின் நாயகனாக, அனைத்துப் போட்டிகளிலும் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிபடுத்தி ஆரோன் பின்ஞ் தெரிவு செய்யப்பட்டார். (ஐ)

# உதைபந்தை சிறுவர்கள் தலையினால் அடிப்பதற்கு விரைவில் வருகிறது தடை



உதைபந்தாட்டத்தின்போது சிறுவர்கள் பந்தைத் தலையினால் அடிப்பதற்குப் போட்டிகளில் தடை விதிக்கப்பட உள்ளது.

11 வயது மற்றும் அதற்குக் கீழான வயதுடைய சிறுவர்கள் இவ்வாறு பந்தைத் தலையினால் அடிப்பதற்கு தடை கொண்டுவரப்படவுள்ளது.

அதுமாத்திரமன்றி பயிற்சிகளின் போதும் தலையினால் பந்தை அடிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட உள்ளது.

கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின்போது தலையினால் பந்தை அடிக்கும் சிறார்கள் மூளை நோய்க்கு உட்பட்டு இறப்பதற்கான வாய்ப்பு அதிகம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது

இதனை அடுத்து இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து மற்றும் அயர்லாந்தில் நடைமுறைக்கு கொண்டுவரப்படவுள்ளது.

இதேவேளை இந்த தடையானது ஏனைய நாடுகளிலும் விரைவில் கொண்டுவரப்படும் என நம்பப்படுகிறது.



# குற்றவாளிகளும், நீதிபதிகளும் அவர்களே அப்படியானால் எப்படி நீதி கிடைக்கும்?

## கேள்வி எழுப்புகிறார் சிவமோகன் எம்.பி.

வவுனியா, பெப். 28

குற்றவாளிகளும் அவர்களே, நீதிபதிகளும் அவர்களே என்ற ரீதியில் இருக்கும் இந்த அரசிடம் இருந்து ஒரு துளி நியாயத்தைக்கூட எதிர்பார்க்க முடியாது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

இதேவேளை, யுத்த காலத்தில் இராணுவப் பாதுகாப்பு எப்படி இருந்ததோ அவ்வாறே வடக்கின் அனைத்துப் பகுதிகளிலும் இராணுவச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ள அவர், ஜனாதிபதி தேர்தலில் தனக்கு வாக்களிக்கவில்லை என்பதால் தமிழ் மக்களை கோட்டாபய பழி வாங்குகிறாரா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்–

ஜனாதிபதி தானே நியமித்த நீதிபதியின் முன்பு அவரே சென்று சாட்சியம் வழங்கி, அவரே தீர்ப்பு வழங்க முற்படுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிராகச் சர்வதேச நீதிபதிகளுக்கு முன்பே அவர் நிறுத்தப்படவேண்டும். இவ்விடயத்தில் கூட ஐ.நா. சபை உருப்படியாக நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

எனவே எதிர்வரும் காலங்களிலாவது, இலங்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்களில் இருந்து விலகியதாக அறிவிக்கப்பட்ட பின்னராவது, சரியான ஒரு நடவடிக்கையை எடுக்க ஐ.நா. முயற்சிக்க வேண்டும். மேலும் உள்ளூர் விசாரணை என்பது எப்படி அமையும் என்பதற்கு இது சிறந்த உதாரணமாக அமையும்.

குற்றவாளிகளும் அவர்களே, நீதிபதிகளும் அவர்களே என்ற ரீதியில் இருக்கும் இந்த அரசிடம் இருந்து ஒரு துளி நியாயத்தைக்கூட எதிர்பார்க்க முடியாது.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதலுக்கான சூத்திரதாரிகளை இன்னும் கண்டுபிடிக்கவில்லை. அவை பற்றிய ஒழுங்கான அறிக்கை தயாரிக்கப்படவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தை இந்த அரசு கிடப்பில் போட்டுவிட்டது.

இந்நிலையில், மன்னார் மனிதப் புதை குழியில் கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்களை ஒழுங்காக பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. அந்த எலும்புக் கூடுகள் யாருடையவை, எந்தக் காலத்துக்கு உரியவை என்ற நம்பகமான அறிக்கையை வெளியிட இந்த அரசு தயங்குகிறது.

வடக்கில் அனைத்துப் பகுதிகளிலும் இராணுவச் சோதனைச்சாவடிகளால் மக்கள் அவதிப்படுகிறார்கள். யுத்த காலத்தில் இராணுவப் பாதுகாப்பு எப்படி இருந்ததோ அவ்வாறே அனைத்துப் பகுதிகளிலும் இப்போதும் உள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் தனக்கு தமிழ் மக்கள் வாக்களிவில்லை என்று தமிழ் மக்களை பழிவாங்குகிறாரா அவர் ? இவ்வாறான சோதனை நடவடிக்கைகளால் தமிழ் மக்களை அடிபணிய வைத்துவிடலாம் என்று ஜனாதிபதி கனவு காண்கிறாரா?

இவ்வாறான அடக்குமுறைகளை நேரடியாகக் கண்காணிப்பதற்கு ஐ.நா. அலுவலகம் வடக்கு – கிழக்கு தமிழர் தாயகத்துப் பகுதிகளில் திறக்கப்பட வேண்டும். அப்போது தான் தமிழ் மக்களின் ஜனநாயக வாழ்வுரிமை உறுதிப்படுத்தப்படும் – என்றுள்ளது. (ஐ)

# இந்துமதம்...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றையெல்லாம் எவரும் உலகத்தில் கடைப்பிடிகலாம். அப்படிக் கடைப்பிடிப் பதற்கு இந்துமதம் எந்தத் தடையும் போடவில்லை. கடைப்பிடிப்பவர்கள் யாவரும் இந்து நெறிப்படி வாழ்பவர்கள் என்றுதான் எடுத்துக் கொள்ளும் பரந்த நோக்கே இந்துமதம் இன்னும் வாழும் நெறியாக இருப்பதற்குக் காரணம் எனலாம்.

அவசர கதியில் இன்று உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. மக்களும் அதன் வழியிலேயே ஓடிக்கொண்டிருக்கிறார்கள். இதனால் அவர்களிடம் அமைதி இல்லை. ஆனந்தம் ஓடிவிடுகிறது. எதற்கும் பதற்றமும் படபடப்பும். ராஜச வாழ்க்கைதான் அவர்களிடம் குடி புகுந்து விட்டது. இதற்க்குக் காரணம் நாகரிகம் என்னும் உருவத்தில் உள்புகுந்த தீராத தலைவலியே எனலாம்.

வாழ்கை முறை மாறிவிட்டது. மனிதர்களின் சமூக அமைப்பே மாறிவிட்டது. இந்த நிலை நீடிக்கக் கூடாது எனப் பல பெரியவர்கள் கூக்குரல் எழுப்புகிறார்கள். ஆனால் அவையும் எடுபடுவனவாக இல்லை.

நவீன நாகரிகத்தினை உயர்வெனக் கருதியவர்கள் மத்தியிலேயே ஒரு விழிப்புணர்வு ஆரம்பித்திருக்கிறது. அதாவது இந்துமத நெறிகளின்படி வாழ்வதுதான் சிறந்தது என்னும் சிந்தனையாகும். மொழிகடந்து, நாடுகடந்து, இனம்கடந்து இந்த எழுச்சி வந்திருக்கிறது. அதற்கு அடிப்படை இந்து மதத்தின் சாத்வீகமாகும்,

இந்துமதம் என்பது உலகினுக்கு நல்ல வாழும் நெறியைக் காட்டி நிற்கிறது. எவரையும் நோகடிக்காமல் அன்பினால் கட்டியணைக்கும் தத்துவத்தை இந்து மத நெறி வழங்கி நிற்கிறது. மதம் பிடிக்கும் மனித இனத்தை மீட்கவேண்டும் என்பதுதான் இந்துமதத்தின் முக்கிய குறிக்கோளாகும். எந்த மதத்தாரையும் அரவணைக்கும் உயரிய பாங்கினை இந்துமதம் தன்னுள்ளே கொண்டிருக்கிறது. நல்லவற்றை வாழ்க்கை ஆக்கிக் கொள்ளுங்கள் என்று சாத்வீகமாக அனைவருக்கும் வழங்கும் நெறியினை இந்து மதம் நெறியாக்கி வைத்திருப்பதனால் அது ஒரு சிறந்த வாழும் நெறியாக வாழ்ந்துகொண்டிருக்கிறது.

# மற்றொரு தீர்மானத்தை ஐ.நாவில் முன்வைக்கவேண்டும் இலங்கை

## கோருகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, பெப். 28

இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் இணை அனுசரணை வழங்கப்பட்ட 30/1 தீர்மானத்தைத் தங்கள் ஒருபோதும் ஆதரிக்கவில்லை என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

30/1 தீர்மானம் மனித உரிமைகள் சபையின் கீழ் இன்னும் செயற்பாட்டிலேயே இருப்பதாகவும், எனவே அரசு மற்றொரு தீர்மானத்தை முன்வைத்து ஒப்பந்தத்தை முற்றிலுமாக நிறுத்தவேண்டும் எனவும் அது கோரியுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அந்தக் கட்சியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத், 2015 ஆம் ஆண்டு தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குவதன் மூலம் சாதகமான முடிவை அடைய முடியாது என்று கூறி இந்த நடவடிக்கையைத் தமது கட்சி அன்றே எதிர்த்தது எனவும் கூறினார்.

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான 30/1 மற்றும் 40/1 தீர்மானங்களில் இருந்து இலங்கை விலகுவதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையில் உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார்.

இருப்பினும் இலங்கை அரசு இந்தத் தீர்மானத்தில் இருந்து விலகினாலும், 30/1 தீர்மானம் மனித உரிமைகள் சபையின் கீழ் இன்னும் செயற்பாட்டிலேயே இருப்பதாகவும், எனவே அரசு மற்றொரு தீர்மானத்தை முன்வைத்து ஒப்பந்தத்தை முற்றிலுமாக நிறுத்தவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை




20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள்ஸ்

(பிறைவேற்) லிமிட்டெட்

இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் விதி யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் – இல, 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576

சாவகச்சேரி – இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

# தேசிய கொள்கையின்றி பயணிக்கின்றது அரசு!

## ரவி கருணாநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 28

தேசியக் கொள்கையொன்று இல்லாமல் பயணிக்கும் அரசால் நாட்டின் எதிர்காலமே பாதிக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

சிறிகொத்தாவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

2015ஆம் ஆண்டு நாம் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போது, நாட்டின் பொருளாதாரம் பாரிய பின்னடைவையே சந்தித்திருந்தது.

எனினும், 100 நாள்கள் வேலைத் திட்டத்தின் ஊடாக நாட்டை முன்னேற்றவும் மக்களுக்கான சலுகைகளை வழங்கவும் நாம் பின்வாங்கவில்லை. அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நாம் நிவாரணங்களை வழங்கினோம்.

ஆனால், இன்று ஆட்சிக்கு வந்துள்ள அரசால் மக்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள். தேசியக் கொள்கையொன்று இல்லாமல் தான் இந்த அரசாங்கம் பயணித்துக்கொண்டிருக்கிறது. இந்த நிலைமை தொடர்ந்தால் இலங்கையின் எதிர்காலமே பாதிக்கப்படும்.

கடனைப் பெற்றுக்கொண்டு மேற்கொள்ளப்படும்



அபிவிருத்திகள் எதுவும் மக்களுக்கு பயனளிக்காது. இதனை மக்களும் உணர்ந்துகொள்ள வேண்டும். சாய்ந்தமருதில் தனியான பிரதேச சபையொன்றை அமைத்து, வர்த்தமானி அறிவித்தலை அரசு வெளியிட்டது.

எனினும், அதனை இரண்டே நாள்களில் வாபஸ் பெறுவதாக அரசு அறிவித்தது. இவ்வாறு ஒரு தீர்மானத்தைக்கூட உறுதியாக எடுக்க முடியாத அரசாகத்தான் இது காணப்படுகிறது – என்றார். (ஐ)

# ஆற்றில் மிதந்த சடலம்!

கொழும்பு, பெப். 28

மஸ்கெலியா சாமிமலை ஓயாவிலிருந்து ஆண் ஒருவரின் சடலத்தை நேற்று முற்பகல் 10 மணியளவில் மஸ்கெலியா பொலிஸார் மீட்டுள்ளனர்.

பிரவுன்ஸ்விக் தோட்டத்தைச் சேர்ந்தவர்கள் அந்த ஆற்றுக்கு நீராடச் சென்றபோது ஆற்றில் சடலம் ஒன்று மிதப்பதைக் கண்டு மஸ்கெலியா பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் பிரவுன்ஸ்விக் தோட்டத்தின் ராணித் தோட்டத்தில் வசித்து வந்த 40 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான சூரியகுமார் என்பவருடையது எனப் பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# தீர்மானத்திலிருந்து 2021 வரை விலகமுடியாது இலங்கை அரசு

## ரணில் விக்கிரமசிங்க அதிரடிக் கருத்து



கொழும்பு, பெப். 28

2021 ஆம் ஆண்டு வரை ஐ.நா. தீர்மானத்திலிருந்து இலங்கை வெளியேறமுடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

போருக்குப் பின்னரான பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஐ.நா. தீர்மானத்திலிருந்து விலகுவதாக ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கை உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

இது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்திருந்த நல்லாட்சி அரசே இந்தத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

2021 ஆம் ஆண்டு இறுதி வரை இந்தத் தீர்மானத்தில் நாங்கள் இணை அனுசரணையாளர்களாக இருக்கிறோம். அதில் இருந்து வெளியேற முடியாது.

2021க்குப் பின்னரே அடுத்த தீர்மானத்துக்கு நீங்கள் இணை அனுசரணை வழங்குவீர்களா? இல்லையா? என்பதை தீர்மானிக்க முடியும் – என்றார்.

கிருபா லேணர்ஸ்
கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS
யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656
தொலைபேசி இல. 021 222 4353 021 492 3200 071 454 6960
அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்
★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேலண்ட் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
தலைமைக் காரியாலயம் 226, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி
வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.02.2020 இல் வெளியிடப்பெற்றது.